بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ    نَحْمَدُهٗ وَنُصَلِّيْ عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ    وَعَلٰى عَبْدِهِ الْمَسِيْحِ الْمَوْعُوْدِ

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

தொகுதி 11

இதழ் 4

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian Tamil

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

ஹிஜ்ரீ கமரீ 1447 - 03 ஷஃபான்

ஹிஜ்ரீ ஷம்ஸி 1405 - ஸுல்ஹ் 22 ★ 22 ஜனவரி 2026

## அல்லாஹ்வின் கட்டளை

اُدْعُ اِلٰى سَبِيْلِ رَبِّكَ بِالْحِكْمَةِ وَالْمَوْعِظَةِ الْحَسَنَةِ وَجَادِلْهُمْ بِالَّتِيْ هِيَ اَحْسَنُ ۗ اِنَّ رَبَّكَ هُوَ اَعْلَمُ بِمَنْ ضَلَّ عَنْ سَبِيْلِهٖ وَهُوَ اَعْلَمُ بِالْمُهْتَدِيْنَ

நீர் நளினமாகவும், அழகிய அறிவுரைகளைக் கொண்டும் உம் இறைவனின் வழியில் அழைப்பீராக. மேலும், அவர்களுடன் மிக அழகிய முறையில் கருத்துப் பரிமாற்றம் செய்வீராக. அவனுடைய வழிகளிலிருந்து தவறியவர்களையும், நேரான வழியில் இருப்பவர்களையும் நிச்சயமாக உம்முடைய இறைவன் நன்கறிகின்றான். (16: 126)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## நபிமொழி

حَدَّثَنَا قُتَيْبَةُ بْنُ سَعِيدٍ، حَدَّثَنَا يَعْقُوبُ بْنُ عَبْدِ الرَّحْمَنِ، عَنْ أَبِي حَازِمٍ، قَالَ: أَخْبَرَنِي سَهْلُ بْنُ سَعْدٍ رَضِيَ اللَّهُ عَنْهُ،

أَنّ رَسُولَ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ ,

قَالَ يَوْمَ خَيْبَرَ:

فَوَاللّٰهِ لَأَنْ يَهْدِيَ اللّٰهُ بِكَ رَجُلًا وَاحِدًا خَيْرٌ لَكَ مِنْ أَنْ يَكُونَ لَكَ حُمْرُ النَّعَمِ".

ஹஸ்ரத் ஸஹல் பின் ஸஅது (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

கைபர் போரின் சந்தர்ப்பத்தில் இறைத் தூதர் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம்

فَوَاللّٰهِ لَأَنْ يَهْدِيَ اللّٰهُ بِكَ رَجُلًا وَاحِدًا خَيْرٌ لَكَ مِنْ أَنْ يَكُونَ لَكَ حُمْرُ النَّعَمِ".

என்று கூறினார்கள்.

அல்லாஹ்வின் மீது ஆணையாக! உம் மூலமாக ஒரு நபருக்கு நேர்வழி கிடைத்தாலும் கூட பின்னர் அது உமக்கு சிகப்பு ஒட்டகங்களை விட சிறந்ததாகும். (ஸஹீஹுல் புஹாரி, ஹதீஸ் எண்: 421)

** * * * * * *

**நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்**

**தொலைபேசி எண் : 1800 103 2131**

இந்த *TOLL FREE* எண்ணில்

:.போன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

## நன்றாக நினைவில் கொள்ளுங்கள் ! எல்லா நபிமார்களுக்கும் தமது பிரச்சாரத்தில் கஷ்டங்கள் ஏற்பட்டுள்ளன

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இந்த விஷயம் சரியானதாகும். அதாவது எவர்கள் இறைவன் புறமிருந்து வருகின்றார்களோ, அவர்களுக்கு தொடக்கத்தில் உலக மக்கள் எதிரிகளாக ஆகிவிடுகின்றனர். மேலும், அவர்களுக்கு பலவகையான துன்பங்களை கொடுக்கின்றனர். மேலும் அவர்களின் வழிகளில் உலக மக்கள் தடைகளை ஏற்படுத்துகின்றனர். துன்பங்களை சந்திக்காத மேலும் சதிகாரன், ஏமாற்றுக்காரன் மற்றும் வியாபாரி போன்ற அவப்பெயர்களை சுமக்காத எந்தவொரு தூதரும், நபியும் வந்ததில்லை. ஆனால் கோடிக்கணக்கான மனிதர்கள் அவர்கள் மீது எல்லா வகையான அம்புகளையும் எய்ய விரும்பியபோதும், கற்களை வீசியபோதும், ஏசி பேசியபோதும் அவர்கள் எவருடைய பேச்சையும் பொருட்படுத்தியதில்லை. எந்த விவகாரமும் அவருடைய வழியில் தடையாக முடியவில்லை. அவர்கள் உலகிற்கு இறை வசனங்களை ஓதிக் காட்டி வந்தார்கள். மேலும் அவர்கள் எடுத்து வந்த அந்த தூதுச் செய்தியை எட்ட வைப்பதில் ஒரு நொடிப்பொழுதைக் கூட அவர்கள் தவறவிட்டதில்லை. அறிவற்ற உலகவாதிகளின் தரப்பிலிருந்து அவர்களுக்கு கொடுக்கப்பட்ட அந்த துன்பங்களும், துயரங்களும் அவர்களை துவண்டுவிடும்படி ஆக்கிவிடவில்லை. இன்னும் கூற போனால் அவர்கள் வேகமாக முன்னேறிச் சென்றார்கள். எந்த அளவிற்கென்றால் அல்லாஹ் அந்த கடினங்களை அவர்கள் மீது எளிதாக்கி விடுகின்ற அந்த காலம் வந்துவிட்டது. மேலும் எதிரிகளுக்கும் புரிய தொடங்கிவிட்டது. (மல்ஃபூஸாத், தொகுதி 4, பக்கம் 152, 1988-ம் ஆண்டு பதிப்பு)

** * * * * * *

## எல்லா சான்றுகளையும் நன்றாக ஆய்வு செய்யுங்கள்; பின்னர் எது வலிமையானதாகவும், உறுதியானதாகவும் இருக்குமோ அதனையே அவர்களுக்கு முன்னால் எடுத்து வையுங்கள்

اُدْعُ اِلٰى سَبِيْلِ رَبِّكَ بِالْحِكْمَةِ وَالْمَوْعِظَةِ الْحَسَنَةِ وَجَادِلْهُمْ بِالَّتِيْ هِيَ اَحْسَنُ ۗ اِنَّ رَبَّكَ هُوَ اَعْلَمُ بِمَنْ ضَلَّ عَنْ سَبِيْلِهٖ وَهُوَ اَعْلَمُ بِالْمُهْتَدِيْنَ

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த வசனத்தின் விளக்கவுரையில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

மார்க்கத்தின் பரப்புரை தற்போது விரிவடைய இருந்தது; மேலும், வேதம் வழங்கப்பட்டிருந்த யூதர்களும் கிறிஸ்தவர்களும் இஸ்லாத்தின் பக்கம் அழைக்கப்பட இருந்தனர். எனவே இறைவன் கூறினான்: அவர்களுக்கு எதிரில் அதிக வலிமை அவசியம் ஆகும். இணை வைப்பாளர்களுக்கு எதிரில் இந்த பணி எளிதாகும். அதாவது இணை வைத்தலை மறுத்து விட்டாலே மற்ற அனைத்து விவகாரங்களுக்கும், சண்டைகளுக்கும் தீர்ப்பு கிடைத்து விடும்.

ஆனால் யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்களுக்கு எதிரில் ஷரீஅத்தின் விரிவான விவாதங்களில் ஈடுபடுவது அவசியமாக இருந்தது. எனவேதான் நுட்பமான ஞானத்துடன் தப்லீஃக் செய்யுமாறு முன்னரே வலியுறுத்தப்பட்டுள்ளது நுட்பமான ஞானத்துடன் அழையுங்கள் என்று அல்லாஹ் கூறுகின்றான். அதாவது அறிவார்ந்த விஷயங்களை எடுத்துரையுங்கள். முந்தைய நபிமார்களுக்கு வழங்கப்பட்ட வேதங்களின் விவகாரங்களின் அடிப்படையில் உரையாடுங்கள். ஆனால், வேதனை என்னவென்றால், முஸ்லிம் விரிவுரையாளர்கள் இந்தக் கட்டளையின் பக்கம் கவனம் செலுத்தவில்லை. எல்லா சான்றுகளையும் நன்றாக ஆய்வு செய்யுங்கள்; பின்னர் எது வலிமையானதாகவும், உறுதியானதாகவும் இருக்குமோ அதனையே அவர்களுக்கு முன்னால் எடுத்து வையுங்கள் என்று இறைவன் கூறியுள்ளான். (துஃப்ஸீர் கபீர் தொகுதி, 6 -பக்கம் 749)

** * * * * * *

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰهِ

தலையங்கம்

## வாருங்கள்! காதியான் செல்வோம்!

காதியான் தாருல் அமானில் ஒவ்வோர் ஆண்டும் நடைபெறும் ஜல்ஸா ஸாலானாவில் பங்கேற்பதற்காக ஒவ்வோர் அஹ்மதியின் உள்ளமும் எப்போதும் ஆர்வத்துடன் துடித்துக் கொண்டிருக்கும். மற்றொரு பக்கம் காதியான் தாருல் அமானில் ஜல்ஸா ஸாலானாவிற்கான ஏற்பாடுகளும் தீவிரமாக நடந்து கொண்டிருக்கும். பெரியவர்களும், சிறியவர்களும், பெண்களும் எந்த அளவுக்கு என்றால் முதியவர்களும் கூட மிகவும் துடிப்புடனும், ஆர்வத்துடனும் ஜல்ஸாவில் பங்கெடுப்பதற்காக காத்திருக்கின்றனர். அல்லாஹ் ஒவ்வொருவருக்கும் எளிமையை உருவாக்குவானாக! மேலும் நலமாகவும், பாதுகாப்பாகவும் காதியான் ஆண்டு மாநாட்டில் பங்கு பெறுவதற்கும், இறை அடையாளங்களின் அருட்கொடையில் இருந்து முழுமையாக பயன்பெறுவதற்கும் எல்லா அஹ்திகளுக்கும் நற்பேறு வழங்குவானாக!

ஒவ்வோர் ஆண்டும் காதியானில் நடைபெறும் இறை மாநாடு தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலலை) அவர்கள் இவ்வாறு கூறியுள்ளார்கள்:

இந்த மாநாட்டை சாதாரண கூட்டங்களைப் போன்று கருதாதீர்கள். இது எப்படிப்பட்ட விவகாரம் என்றால் இது முற்றிலும் உண்மைக்கான ஆதரவு, இஸ்லாமிய கலிமாவின் உயர்வு ஆகியவற்றை அடித்தளமாகக் கொண்டுள்ளது. இறைவன் இதன் அடிக்கல்லை தனது கரத்தால் வைத்துள்ளான். இதற்காக சமுதாயங்கள் தயார்படுத்தப் பட்டுள்ளன. அவை மிகவும் அருகாமையில் வந்து சேரும். எந்த வல்லமை மிக்க இறைவனுக்கு முன்னால் சாத்தியமற்ற விஷயம் எதுவும் இல்லையோ, இது அந்த இறைவனின் செயலாகும். ( இஷ்திஹார், டிசம்பர் 07,1891)

இதே போன்று, அன்னார் (அலை) கூறினார்கள்: முடிந்தவரை அனைத்து நண்பர்களும், இறைவனுடைய விஷயங்களை கேட்பதற்காக மட்டும் மேலும் துஆவில் பங்கு பெறுவதற்காகவும் இந்த தேதிகளில் காதியான் வந்து விட வேண்டும். மேலும் இந்த ஜல்ஸாவில் எப்படிப்பட்ட உண்மைத்துவங்கள் மற்றும் ஞானங்களை கேட்பதற்கான பணி இருக்கும் என்றால் அது ஈமான் மற்றும் உறுதியையும், இறைஞானத்தையும் வளர்த்துக் கொள்வதற்கு அவசியமாகும் மேலும் அந்த நண்பர்களுக்காக குறிப்பான துஆக்களும் இருக்கும்; கவனமும் இருக்கும்.

மேலும் அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: இந்த ஜல்ஸாக்களினால் கிடைக்கின்ற ஒரு தற்காலிக நன்மை இதுவாகும். அதாவது இது ஒவ்வொரு புதிய ஆண்டிலும் எந்த அளவிற்கு புதிய சகோதரர்கள் இந்த ஜமாஅத்தில் இணைகின்றார்களோ அவர்கள் குறிப்பிட்ட நாட்களில் (காதியானிற்கு) வருகை தந்து தமக்கு முன்னர் இந்த ஜமாஅத்தில் இணைந்த சகோதரர்களின் முகங்களை பார்த்துக் கொள்கின்றார். மேலும் ஒருவருக்கொருவர் அறிமுகமாகி பரஸ்பரம் தொடர்புகள் உருவாகி அந்த அறிமுகம் முன்னேற்றம் அடையும். மேலும் எந்த சகோதரர் இந்த இடைப்பட்ட நாட்களில் இந்த தற்காலிக உலகத்தில் இருந்து விடை பெற்று சென்று விடுவாரோ இந்த ஜலசாவில் அவருடைய பாவமன்னிப்பிற்காக துஆ செய்யப்படும். மேலும் அனைத்து சகோதரர்களையும், சகோதரிகளையும் ஒன்றிணைப்பதற்காகவும் மேலும் அவர்களின் வறட்டுத்தன்மை மற்றும் நயவஞ்சகத்தை இடையில் இருந்து அகற்றுவதற்கும் கண்ணிய மிக்க இறைவனின் சன்னிதானத்தில் துஆக்களின் மூலமாக முயற்சிகள் செய்யப்படும். இந்த ஆன்மீக ஜல்ஸாவில் இன்னும் பல ஆன்மீக நன்மைகளும், பயன்களும் இருக்கின்றன. அது இன்ஷா அல்லாஹ்! அவ்வப்போது வெளிப்பட்டுக் கொண்டே இருக்கும். (ஆஸ்மானி ஃபைஸலா, பக்கம் 9-10)

இந்த அருளுக்குரிய ஜல்ஸாவின் கலந்து கொள்ளக் கூடிய விருந்தினர்களுக்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் சுயமே தியாகங்களை செய்திருக்கின்றார்கள். ஜல்ஸா ஸாலானாவின் ஆரம்ப காலங்களில், எந்த நாட்களில் ஹஸ்ரத் மீர் நாஸிர் நவாப் ஸாஹிப் (ரலி) அவர்களின் பொறுப்பில் ஜல்ஸா ஸாலானாவிற்கான ஏற்பாடுகள் ஒப்படைக்கப்பட்டிருந்தன. ஒருமுறை ஜல்ஸாவில் பங்கெடுக்கும் விருந்தினர்களுக்கான செலவினங்களில் பற்றாக்குறை ஏற்பட்டு விட்டது. எனவே ஹஸ்ரத் மீர் நாஸிர் நவாப் ஸாஹிப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் கண்ணியத்திற்குரிய மாமனராக இருந்தார்கள். அன்னார் (ரலி) ஹுஸூர் (அலை) அவர்களிடம் வருகை தந்தார்கள். மேலும், நாளைய தினம் ஜல்ஸாவின் விருந்தினர்களுக்கான விருந்து உபசரிப்பு செலவுகளுக்கு பணம் இல்லை என்று அன்னார் (ரலி) கூறினார்கள். அதற்கு ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள்: வீட்டிலிருந்து தமது மனைவியிடம் அதாவது ஹஸ்ரத் உம்முல் மூஃமினீன் ஹஸ்ரத் நுஸ்ரத் ஜஹான் பேகம் ஸாஹிபா (ரலி) அவர்களிடம் இருந்து, அவர்களுடைய நகைகளைப் பெற்றுக் கொண்டு அதனை விற்பனை செய்து விடுங்கள்; மேலும் ஜல்ஸாவில் கலந்து கொள்ளும் விருந்தினர்களுக்கான ஏற்பாட்டை செய்யுங்கள். ஆக, ஹஸ்ரத் மீர் ஸாஹிப் அவர்கள் அந்த நகைகளைப் பெற்று, அதனை விற்பனை செய்தார்கள். மேலும் ஜல்ஸாவில் கலந்து கொண்ட விருந்தினர்களுக்கான ஏற்பாட்டை செய்தார்கள். அடுத்த நாள், மீண்டும் வந்து கூறினார்கள்: நகைகளை விற்று எந்த அளவிற்கு பணம் கிடைத்ததோ அதன் மூலம் ஒரு நாள் செலவை மட்டுமே பூர்த்தி செய்ய முடிந்துள்ளது; மேலும் விருந்தினர்களுக்கான ஒருநாள் செலவு முழுமையாகி விட்டது; தற்போது அடுத்த நாளுக்காக மீண்டும் தேவை இருக்கிறது.

அப்போது ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறினார்கள்: நம்மிடம் எந்த அளவிற்கு நம்மிடம் வாய்ப்பு இருந்ததோ நாம் செலவு செய்துள்ளோம். இனி நம்மிடம் ஒன்றும் இல்லை. எவருடைய விருந்தினராக ஒருவர் இருப்பாரோ அந்த விருந்தினரை அந்த நபர் சுயமே அவருக்குரிய ஏற்பாட்டை செய்யட்டும். இந்த அறிவிப்பின் அறிவிப்பாளர் ஹஸ்ரத் முன்ஷீ ஸஃபர் ஸாஹிப் கபூர்தலீ (ரலி) அவர்கள் ஆவார்கள். அடுத்த நாள் தபால்காரர் வந்தார். அவரிடத்தில் சில மணி ஆர்டர்கள் இருந்தன. அவற்றில் இவ்வாறு எழுதப்பட்டிருந்தது: எங்களுக்கு விருப்பம் இருந்த போதும், ஜல்ஸா ஸாலானாவில் எங்களால் கலந்து கொள்ள முடியவில்லை. எனவே விருந்தினர்களின் சேவைக்காக இந்த தொகை அனுப்பி வைக்கப்படுகிறது. ஹுஸூர் (அலை) அவர்கள் ஹஸ்ரத் மீர் ஸாஹிப் அவர்களை அழைத்தார்கள்; மேலும், அன்னாரிடம் அந்த மணி ஆர்டர்களை கொடுத்து, அல்லாஹ்வின் மீதான நிச்சய உறுதி என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார்கள். மேலும் கூறினார்கள்: எந்த அளவிற்கு ஓர் உலகவாதிக்கு ரூபாய் நோட்டுகளால் நிரம்பியுள்ள தனது பணப் பெட்டியின் மீது நம்பிக்கை இருக்குமோ, அதைவிட அதிகமாக எனக்கு இறையிருப்பின் மீது நம்பிக்கை இருக்கின்றது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஜல்ஸா ஸாலானாவில் கலந்து கொள்ளக் கூடியவர்களுக்காக செய்திருக்கின்ற துஆவுடன் இந்த உரையாடல் நிறைவு செய்யப்படுகின்றது.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: இந்த

இறை மாநாட்டிற்காக பயணம் மேற்கொண்டுள்ள ஒவ்வொரு நபருடனும் அல்லாஹ் இருப்பானாக! மேலும் அவர்களுக்கு மகத்தான நற்கூலியை வழங்குவானாக! மேலும் அவர்கள் மீது கருணை காட்டுவானாக! மேலும் அவர்களின் கடினமான, துன்பமான நிலமைகளை அவர்களுக்கு எளிதாக்கி விடுவானாக! மேலும் அவர்களின் வேதனைகளை அகற்றுவானாக! மேலும் அவர்களுக்கு எல்லா துன்பங்களிலிருந்தும் இரட்சிப்பு வழங்குவானாக! மேலும் அவர்களின் நல்விருப்பங்கள் நிறைவேறுவதற்குரிய வழிகளை அவர்களுக்கு திறந்து கொடுப்பானாக! மேலும் மறுமை நாளன்று எவர்கள் மீது அவனுடைய அருளும், கருணையும் இருக்கின்றதோ அந்த இறை அடியார்களுடன் அவர்களையும் எழுப்புவானாக! .....(இஷ்திஹார், 7- டிசம்பர் 1892-ம் ஆண்டு) ஆமீன்!

*******

# ஜுமுஆ பேருரை

**தபூக் போரின் நிலைமைகள் மற்றும் சம்பவங்களின் ஒளியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பரிசுத்த வாழ்க்கை வரலாறு**

நிர்வாகம் என்பது வேறு விஷயமாகும்; பணியாற்றுவது என்பது வேறு விஷயமாகும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். மேலும் நிர்வாகத்தை நிலைநாட்டுவதற்காக தவறிழைத்த நபர் யாராக இருந்தாலும் அவரிடமும் விசாரிக்கப்படும். எனவே இறைவனுடைய கட்டளையின்படி மார்க்கத்திற்காக ஷைத்தானை விரட்டக் கூடிய முயற்சிகளை செய்யுங்கள்; ஆனால், நீங்கள் புகழப்பட வேண்டும் என்பதற்காக ஒருபோதும் செய்யாதீர்கள்; மேலும், பணி ஒன்றை செய்து விட்டு நம்முடைய தவறுகள் பற்றி நம்மிடம் விசாரிக்கப்படாது என்று எண்ணம் கொள்ளாதீர்கள்

நீங்கள் இறைவனுக்கு உபகாரம் செய்ததாக பெருமை கொள்ள வேண்டாம்

உங்கள் உதவியை நினைவூட்டவோ துன்பங்கொடுக்கவோ செய்யாதீர்கள். எல்லா வழி வழிமுறைகளிலும் இஸ்லாத்துக்கு தொண்டாற்றுங்கள் (ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள்)

அமெரிக்காவின் முரப்பியான மதிப்பிற்குரிய அஸிஸீர் ரஹ்மான் காலித் ஸாஹிப் மர்ஹூம் மற்றும் இந்தோனேசியாவைச் சேர்ந்த மதிப்பிற்குரிய எய்தி ஹூமாய்தி ஸாஹிப் மர்ஹூம் ஆகியோரின் ஜனாஸா காயிப் தொழுகையும் நற்குறிப்பும்

## ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 05 டிசம்பர் 2025** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1404 ஆண்டு **ஃபத்ஹ்** மாதம் **05 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○

صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

கடந்த குத்பாவில் ஹஸ்ரத் கஅப் பின் மாலிக் (ரலி) அவர்களும், வேறு சில ஸஹாபிகளும் தபூக் போரிலிருந்து பின்தங்கிவிட்டது மற்றும் அதனால் பெருமானார் (ஸல்) அவர்கள் அடைந்த அதிருப்தி ஆகியவை குறித்து குறிப்பிடப்பட்டது.

இது குறித்து ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களும் குறிப்பிட்டிருக்கின்றார்கள். இது சம்பந்தமாக ஜமாஅத்திற்கும் அறிவுரை வழங்கியிருக்கின்றார்கள். அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்:

ஹதீஸில் வருகின்றது. மூன்று நம்பிக்கையாளர்களும் இந்த போரில் கலந்து கொண்டிருக்கவில்லை. அவர்களில் ஒருவருடைய நீண்ட கூற்று ஹதீஸில் வருகின்றது. அவர் கூறுகின்றார்: அதாவது அந்த ஸஹாபி.

நான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் திரும்பி வந்த பிறகு அன்னாரிடம் சென்றேன். பின்தங்கியவர்கள் இன்னும் வேறு யாராவது வந்திருக்கின்றார்களா? இல்லையா? என்று கூறுங்கள் என நான் மக்களிடம் கேட்டேன். மேலும் அவர்கள் வருத்தம் தெரிவிப்பதற்கு என்னென்ன வழிமுறைகளை மேற்கொண்டிருக்கின்றார்கள்? மேலும் அவர்களுடன் எவ்வாறு நடந்து கொள்ளப்பட்டது? என்று நான் மக்களிடம் விசாரித்தேன். அப்போது, ஆட்கள் வந்த உடனேயே சாக்கு போக்குகளை கூறுகின்றனர்; மேலும் அல்லாஹ்வின் தூதர் அவர்களே! எங்களுடைய மன்னிப்பிற்காக துஆ செய்யுங்கள் என்று அந்த நபர்கள் கேட்கின்றனர்: எனவே அன்னாரும் துஆ செய்து விடுகின்றார்கள் என்று மக்கள் கூறினர்.

அந்த ஸஹாபி, அதாவது ஹஸ்ரத் கஅப் பின் மாலிக் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். நானும் ஏதாவது சாக்குபோக்குகளை கூறிவிடலாம்; மேலும் தண்டனையில் இருந்து தப்பித்துக் கொள்ளலாம் என்று நினைத்தேன். பிறகு எனக்கு சில எண்ணம் வந்து விட்டது. மேலும், யார் யாரெல்லாம் வந்துவிட்டார்கள்? என்று நான் ஸஹாபிகளிடம் கேட்டேன். அவர்கள் பெயர்களை குறிப்பிட்டார்கள். அனைவருமே நயவஞ்சர்களாக இருந்தனர். இரண்டு நம்பிக்கையாளர்களின் பெயர்களை மட்டுமே அவர்கள் குறிப்பிட்டனர். அவர்கள் எந்தவொரு சாக்குபோக்குகளையும் கூறவில்லை. அவர்கள் தமது தவறை ஒப்புக் கொண்டார்கள். என்றும் அவர்கள் கூறினர்.

அப்போது, நான் ஏன் நயவஞ்சகர்களோடு சேர வேண்டும்? மேலும், உண்மையில் சரியான காரணம் என்று கூறமுடியாத அப்படிப்பட்ட சாக்குபோக்குகளை எடுத்துரைப்பதற்கு பகரமாக, தவறு நிகழ்ந்துவிட்டது என்று தெளிவாக கூறிவிடலாம்; அன்னார் (ஸல்) எவ்வாறு விரும்புகின்றார்களோ அவ்வாறு என்னுடன் நடந்து கொள்ளட்டும் என்று நான் உள்ளத்தில் கூறினேன். இந்த சிந்தனை வந்த உடனே நான் எனது தவறை ஒப்புக் கொள்ள தீர்மானித்து விட்டேன். இவ்வாறு அல்லாஹ் என்னை நயவஞ்சகர்களோடு சேர்வதிலிருந்து காப்பாற்றி விட்டான்.

ஆக, நான் சென்றேன். மேலும், என்னுடைய சோம்பேறித்தனம் மற்றும் கவனமின்மை ஆகியவற்றின் காரணமாகத்தான் போரில் கலந்து கொள்ளவில்லையே தவிர வேறு எந்தவொரு நியாயமான காரணமும் இல்லை என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் தெளிவாக கூறிவிட்டேன். எனவே இறைவன் உங்களைப் பற்றி கட்டளை இறக்கும் வரை உங்களுடன் தொடர்பு துண்டிக்கப்படும் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அந்த ஸஹாபியின் பெயர் கஅப் பின் மாலிக் (ரலி) ஆகும்.

அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த கட்டளையினால் எங்களுக்கு கடும் வேதனை ஏற்பட்டது. ஏனென்றால் மதீனாவில் அனைவரும் முஸ்லிம்களாகவே இருந்தனர். மேலும் எவர்கள் நயவஞ்சகர்களாக இருந்தார்களோ அவர்களிலும் எவருக்கும் இவர்களுடன் பேச தைரியம் இருக்கவில்லை.

இந்த அனைத்து விஷயங்களையும் நான் சுருக்கமாகவே எடுத்துரைத்துள்ளேன். கடந்த குத்பாவில் விரிவாக எடுத்துரைத்து விட்டேன்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இதை குத்பாவில் எடுத்துரைத்திருந்தார்கள். அடுத்து, நான் கூறியதைப் போன்று இது சம்பந்தமாக ஜமாஅத்திற்கு

அறிவுரையும் வழங்கினார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

இங்கோ நான் பார்த்திருக்கின்றேன். அதாவது காதியானில், 1936-ம் ஆண்டு நிகழ்ந்த விஷயமாகும். எந்த மக்களுடன் பேசுவது தடை செய்யப்பட்டுள்ளதோ அதாவது எவர்களுக்கு தண்டனை கிடைக்கின்றதோ அவர்கள் முஹல்லாவில் அஹ்மதிகளின் வீடுகளுக்கு சென்று விடுகின்றார்கள்; அவர்கள் அறிவதே கிடையாது. முஹல்லாவாசிகள் உறங்கிக் கொண்டிருகின்றார்களா? என்று தெரியவில்லை. இங்குள்ள சில அஹ்மதிகள் பாம்புகளை வளர்க்கின்றார்கள்; ஆனால் அவர்கள் நினைவில் கொள்ளட்டும்! இந்த பாம்புகளால் இறைவனையும் தீண்ட முடியாது; அவனுடைய தூதரையும் கொத்த முடியாது கலீஃபாவையும் தீண்ட முடியாது; அவற்றை வளர்க்கின்றவர்களேயே அவை தீண்டும். அல்லாஹ்வின் அருளினால் நாம் பாதுகாப்பாக இருக்கின்றோம். ஏனென்றால் எவர்களை வல்ல அல்லாஹ் தனது பாதுகாப்பில் எடுத்துக் கொண்டானோ அவர்களை எவரால் தீண்ட முடியும்? எவர்களை அவை தீண்ட முடியுமோ அவர்களையே அவை தீண்டும். வேதனை என்னவென்றால், இவர்கள் பார்த்த பிறகும் கூட அந்த பாம்புகளுடைய செயல்பாடுகளில் (கண்களை மூடிக் கொண்டு) அலட்சியத்துடன் செயல்படுகின்றார்கள்.

அக்காலத்தில் சில குழப்பங்கள் உருவாகியிருந்தன. அதன் காரணமாக அன்னாருக்கு இதை கூற வேண்டியதாயிற்று.

எவ்வாறு இருப்பினும், அன்னார் (ரலி) மேலும் கூறுகின்றார்கள்:

மதீனாவில் ஒரு நயவஞ்சகரால் கூட இவர்களுடன் பேச முடியாத நிலை இருந்தது.

ஹஸ்ரத கஅப் பின் மாலிக் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த கட்டளைக்கு சில நாட்களுக்கு பிறகு, மனைவி, மக்களும் இந்த நபர்களிடமிருந்து விலகிவிடுங்கள் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறியதாக தெரியவந்தது. எங்கள் மூவரில் ஒரு ஸஹாபி வயதானவராக இருந்தார். அவருடைய மனைவி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் சென்று, இறைத் தூதர் (ஸல்) அவர்களே! என்னுடைய கணவரோ ஏற்கனவே மரணித்துவிட்டார்; அவர் உணவு உண்பதும் இல்லை; உறங்குவதும் இல்லை; அடுத்து முதுமையின் பலவீனத்தின் காரணமாக எப்பொழுதும் உதவியின் தேவை உடையவர் ஆவார். அவர் முன்னரே தாம்பத்திய உறவிற்கு தகுதியற்றவர் ஆவார். தாங்கள் அனுமதி அளித்தால் அவர் உண்பதற்கும், பருகுவதற்கும் நான் உதவி செய்வேன்.

அன்னார் (ஸல்) கூறினார்கள்: ஆகட்டும்! இந்த அளவிற்கு அனுமதி வழங்கப்படுகிறது.

ஹஸ்ரத் கஅப் பின் மாலிக் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

நானும் ஏன் எனக்காக இவ்வாறு அனுமதி வாங்குவதற்கான ஏற்பாட்டை செய்யக் கூடாது? என்ற எண்ணம் தோன்றியது; ஆனால், பிறகு இந்த எண்ணம் வந்தது; அதாவது, அவர் வயதானவர் ஆவார்; நான் இளைஞன் ஆவேன்; எனக்கு அவ்வாறு செய்வது உகந்ததல்ல.

எனவே நான் எனது மனைவியிடம் கூறினேன்: நீ உனது தாய் வீட்டுக்கு சென்று விடு! ஏனெனில், நான் உன்னை அழைத்து நீ அதற்கு பதில் கொடுத்து நற்கூலியிலிருந்து நீ இழப்பிற்குரியவளாக ஆகிவிடக்கூடாது. என்னுடன் இவர் பேசுவார் என்ற எண்ணம் வேறு எவரையும் குறித்து எனக்கு இருந்திருக்கவில்லை. ஆயினும், என்னுடைய வேதனையைக் கண்டு அன்னாருக்கு நிச்சயமாக கருணை ஏற்படும் என்ற எண்ணம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய அன்பு மற்றும் பரிவின் காரணமாக எனக்கு இருந்தது. ஆகையினால் அன்னாருடைய சபைக்கு செல்வேன்; சப்தமாக அஸ்ஸலாமு அலைக்கும் கூறுவேன்; பிறகு அன்னாருடைய உதடுகள் அசைகின்றனவா? இல்லையா? என்று பார்ப்பேன்; ஆனால் அன்னார் (ஸல்) பதிலளிக்க மாட்டார்கள்.மேலும் நான் பதற்றத்துடன் எழுந்து வந்து விடுவேன். பிறகு அன்னாருடைய உதடு அசைந்திருக்கலாம்; என்னால் பார்க்க முடியாமல் போயிருக்கலாம் என்று நான் எண்ணம் கொள்வேன்; ஆகையால் அப்பொழுதோ சபையில் இருந்து எழுந்து சென்று விடுவேன்; பின்னர் மீண்டும் திரும்பி வந்து சப்தமாக அஸ்ஸலாமு அலைக்கும் கூறி அன்னாருடைய உதடுகளை பார்ப்பேன்; மீண்டும் எழுந்து வந்து விடுவேன். பிறகு செல்வேன். அன்னார் (ஸல்) பதில் அளிக்க மாட்டார்கள். ஆனால் அவ்வப்போது ஓரக் கண்ணால் என்னை பார்ப்பார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்:

நீண்ட நாட்கள் கழிந்து விட்டன; நான் என்னுடைய தந்தை வழி சகோதரனிடம் சென்றேன்; அவருடன்தான் எப்பொழுதும் என்னுடைய உண்ணுதலும், பருகுதலும், பழகுதலும் இருக்கும். அவர் தன்னுடைய தோட்டத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தார். நான் அவரிடம் கேட்டேன்: என்னுடைய சகோதரரே! நீர் என்னுடைய ரகசியங்களை அறிந்தவர்; நாம் எப்பொழுதும் இருவரும் ஒன்றாக இருந்திருக்கின்றோம்; நம்முடைய எந்த விஷயமும் பரஸ்பரம் மறைவாக இருந்ததில்லை. நான் களங்கமற்ற முஸ்லிம் ஆவேன் என்பதை நீர் நன்றாக அறிவாய். மேலும் நயவஞ்சகத்தின் எந்தவொரு அம்சமும் என்னிடம் இல்லை; இன்று நான் பதற்றத்தில் உம்மிடம் கேட்க வந்துள்ளேன்; நீர் கூறும்! நான் நயவஞ்சகனா? அவர் எந்த பதிலும் அளிக்கவில்லை; வானத்தை நோக்கி பார்த்தார். இதன் பொருள் இறைவனும், அவனுடைய தூதருமே நன்றாக அறிந்தவர்கள் ஆவர்.

ஹஸ்ரத் கஅப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

என்னுடைய ரகசியத்தை அறிந்த என்னுடைய சகோதரன் எனக்கு இதற்கு பதில் அளிக்காதபோது, உலகமே எனக்கு சுருங்கிவிட்டது போன்று எனக்கு தோன்றியது. மேலும், நான் பதற்றத்துடன் தோட்டத்தின் சுவற்றை ஏறிக் குதித்து வெளியே சென்று விட்டேன். ஒரு பித்தனைப் போன்று நகரத்தை நோக்கி நடந்தேன்; நகரின் அருகாமையில் சென்றவுடன் ஒரு மனிதர் என் அருகே வந்து, நீர் இன்ன நபரா? என்று கேட்டார்; நான் ஆம்! என்றேன்; அவர் எனக்கு ஒரு கடிதத்தை அளித்தார். இதனை இன்ன அரசர் அனுப்பியுள்ளார்; அவர் அரபு நாட்டினுடைய ஒரு கிறிஸ்துவ அரசர் ஆவார். அவர் ரோமானிய அரசாங்கத்தின் கீழ் இருந்தார். நான் திறந்து அதனை படித்தேன்; அதில் இவ்வாறு எழுதப்பட்டிருந்தது; நீங்கள் அரேபியாவின் தலைவர் ஆவீர்கள் என்பதை நாங்கள் அறிவோம்; உங்களையோ கண்ணியப்படுத்த வேண்டும்; ஆனால் உங்களை முஹம்மது ((ஸல்) அவர்கள்) இழிவு படுத்தி விட்டார்; நீங்கள் என்னிடம் வந்தால் உங்களுடைய கண்ணியத்திற்கு ஏற்ப நான் நடந்து கொள்வேன்.

ஹஸ்ரத் மாலிக் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: எனது சகோதரர் வழங்கிய பதிலால், அதாவது நான் தோட்டத்துக்குச் சென்றபோது, என் தந்தைவழி சகோதரர் எனக்கு அளித்த பதிலால் எனது உள்ளம் மாறிக் கொண்டிருந்தது. அதாவது, அதனால், அப்பொழுதும் நிம்மதியின்மை இருந்தது. அந்தக் கடிதத்தைப் பார்த்ததும் எனக்கு மயக்கமே வந்து விட்டது. இது ஷைத்தானுடைய இறுதி தாக்குதலாக இருக்கலாம் என்று

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

நான் நினைத்தேன். எனது பாதங்கள் தடுமாறி விடக் கூடாது என்று எண்ணி, என் பின்னால் வாருங்கள் என்று அந்த தூதுவனிடம் கூறினேன். ஓரிடத்தில் ஒரு மனிதன் நெருப்பு மூட்டிக் கொண்டிருந்தான். நான் அந்தக் கடிதத்தை துண்டு துண்டாகக் கிழித்து அந்த நெருப்பில் வீசிவிட்டேன் மேலும், உன்னுடைய அரசனிடம் சென்று, இதுவே என் பதிலாகும் என்று கூறு! என அந்த தூதுவனிடம் நான் கூறினேன். இது அவர்களுடைய துன்பம் மற்றும் துயரத்தின் இறுதி தருணமாக இருந்தது. இறுதியில் அல்லாஹ் கருணை புரிந்தான். மேலும், அன்னாருடைய தவறு மன்னிக்கப்படட்டுமாக என்று இறைத் தூதர் (ஸல்) அவர்கள் வேண்டினார்கள்.

(குத்பாத்தே மஹ்மூத், தொகுதி 17, பக்கம் 655 - 658, குத்பா பேருரை, அக்டோபர் 19, 1936-ம் ஆண்டு)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் ஓர் இடத்தில் மேலும் கூறுகின்றார்கள்:

கஅப் பின் மாலிக் அவர்களுடைய சம்பவம் எப்படிப்பட்ட படிப்பினை மிக்க சம்பவம் ஆகும்! அன்னார் (ரலி) அனைத்து போர்களிலும் நபி (ஸல்) அவர்களுடன் இருந்தார்கள். மக்கா வெற்றியின்போதும் உடன் இருந்தார்கள். ஆனால் தபூக் போரில் சோம்பேறித்தனத்தின் காரணமாக பின்தங்கிவிட்டார்கள். அவர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எப்படிப்பட்ட கடுமையான தண்டனை அளித்தார்கள்? என்றால், அவர்களுடைய ஸலாத்திற்கு கூட பதில் கொடுக்காமல் இருந்தார்கள். அனைத்து முஸ்லிம்களையும் (அன்னாருடன்) பேசுவதிலிருந்து தடை செய்திருந்தார்கள். எந்த அளவிற்கு என்றால், மனைவியையும் கூட பிரித்து விட்டார்கள். இந்நிலையில் குஸ்ஸானுடைய அரசனின் தூதுவன் அவர்களிடத்தில் ஒரு கடிதம் கொண்டு வந்தான்; அதில் இவ்வாறு எழுதப்பட்டிருந்தது; அதாவது, உம்முடைய நண்பர் உம்மை ம கண்ணியப்படுத்தவில்லை; நீர் என்னிடம் வந்து விடுவீராக!

இது ஷைத்தானுடைய இறுதியான தாக்குதலாகும் என்று கூறி அந்தக் கடிதத்தை அடுப்பில் வீசி விட்டார்கள். மேலும் உம்முடைய அரசனுக்கு இந்த தூதுச் செய்தியை எட்ட வைத்து விடு! என்று தூதுவனிடம் அன்னார் கூறினார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

இன்றைய காலத்து மக்கள் இருக்கின்றார்கள்.

ஜமாஅத்தில் அக்காலத்து நிலைமை இவ்வாறாக இருந்தது. அதாவது அவர்களிடம் விசாரிக்கப்பட்டால் அதாவது ஏதாவது கேள்வி கேட்கப்பட்டால் எங்களுடைய தொண்டுகளுக்கு கண்ணியமளிக்கவில்லை; எங்களுக்கு கண்ணியமளிக்கப்படவில்லை என்று அவர்கள் கூறுகின்றார்கள்.

நிர்வாகம் என்பது வேறு விஷயமாகும்; பணியாற்றுவது என்பது வேறு விஷயமாகும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். மேலும் நிர்வாகத்தை நிலைநாட்டுவதற்காக தவறிழைத்த நபர் யாராக இருந்தாலும் அவரிடமும் விசாரிக்கப்படும்.

எனவே இறைவனுடைய கட்டளையின்படி மார்க்கத்திற்காக ஷைத்தானை விரட்டக் கூடிய முயற்சிகளை செய்யுங்கள்; ஆனால், நீங்கள் புகழப்பட வேண்டும் என்பதற்காக ஒருபோதும் செய்யாதீர்கள்; மேலும், பணி ஒன்றை செய்து விட்டு நம்முடைய தவறுகள் பற்றி நம்மிடம் விசாரிக்கப்படாது என்று எண்ணம் கொள்ளாதீர்கள்.

நீங்கள் இறைவனுக்கு உபகாரம் செய்ததாக எண்ணிக் கொள்ள வேண்டாம். مَنًّ وَّاَذًی அதாவது உங்கள் உதவியை நினைவூட்டவோ துன்பங்கொடுக்கவோ செய்யாதீர்கள். எல்லா வழி வழிமுறைகளிலும் இஸ்லாத்துக்கு தொண்டாற்றுங்கள். (குத்பாத்தே மஹ்மூத், தொகுதி 5, பக்கம் 527 - 528, குத்பா பேருரை ஜூலை 27. 1917)

செய்த நன்மையை சுட்டிக் காட்டாதீர்கள்; மாறாக, தொண்டாற்றுங்கள் .அல்லாஹ்வை திருப்தி படுத்த இந்த உணர்வே இருக்க வேண்டும்.

இது கிலாஃபத்தின் தொடக்கத்தில் வழங்கப்பட்ட குத்பாக்களில் கூறப்பட்டதாகும். முன்னர் கூறப்பட்ட மேற்கோள் 1936ம் ஆண்டின் மேற்கோள் ஆகும்.

தபூக் போரின் பயணம் எப்படிப்பட்ட ஞானம் நிறைந்த மற்றும் அருளுக்குரிய பயணமாக நிரூபணம் ஆனது என்றால், அரேபியாவின் அனைத்து எல்லைகளிலும் முஸ்லிம்களின் ஆதிக்கம் நிலை பெற்று விட்டது. சிறிது நாட்களிலேயே முழு அரேபியாவிலும் இஸ்லாத்தின் கொடி பறக்க ஆரம்பித்துவிட்டது.

இது தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் எடுத்துரைக்கின்றார்கள். அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்:

தபூக் போரிலருந்து திரும்பிய உடன் தாயிஃப் மக்களும் வந்து கட்டுப்படுதலை மேற்கொண்டு விட்டார்கள். முதலில் அவர்கள் சண்டையிட்டு வந்தார்கள்.

பின்னர் அவர்கள் கீழ்ப்படிதலை மேற்கொண்டனர். அதன் பிறகு அரேபியாவின் பல்வேறு கோத்திரங்கள் ஒன்றன் பின் ஒன்றாக வந்து இஸ்லாத்தின் ஆட்சியின் கீழ் இணைவதற்கு அனுமதி வேண்டின. மேலும் சில நாட்களிலே முழு அரபியாவிலும் இஸ்லாத்தின் கொடி பறக்க ஆரம்பித்து விட்டது.

(தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் உலூம், தொகுதி 20, பக்கம் 363)

திரும்பி வந்த பிறகு இந்தவொரு சிறிய போரும் நிகழ்ந்தது. அது ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களின் போர் என்று அழைக்கப்படுகின்றது. இது நஜ்ரனில் ஹாரிஸ் பின் கஅப் கோத்திரத்தைச் சேர்ந்த பனு அப்துல் மதானை நோக்கியதாக இருந்தது. பனூ ஹாரிஸுடைய கோத்திரத்தின் செல்வாக்கு மிக்கவராக இருந்த நபரின் பெயர் அம்ரு பின் யஸீத் என்பதாக இருந்தது.

இப்னு ஸஅத் அவர்களின் அறிவிப்பின்படி, இந்த போர் 10-ஆம் ஹிஜ்ரியின் ரபீயுல் அவ்வல் மாதத்தில் நடந்தது. ஆனால் இப்னு ஹிஷாம் அவர்களின் பார்வையில், இது 10-ம் ஹிஜ்ரியின் ரபீயுல் ஆகிர் அல்லது ஜமாதில் ஊலா மாதத்தில் நடைபெற்றது.

ஸீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலில் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள், காலிது பின் வலீத் அவர்களை நஜ்ரான் நோக்கி அனுப்பிய நிகழ்வின் தேதியை ரபீயுல் அவ்வல் மாதம், 10-ம் ஹிஜ்ரீ என எடுத்துரைக்கின்றார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா லி இப்னி ஸஅத், தொகுதி 2, பக்கம் 128, தாருல் குதுபில் இல்மியா, 1990-ம் ஆண்டு பதிப்பு) (ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்களின் நூல், ஸீரத் காத்தமுன் நபிய்யீன், பக்கம் 833)

எவ்வாறு இருப்பினும், இதனுடைய சிறிது விளக்கம் இவ்வாறாகும். அதாவது போரிடுவதற்கு முன்பு எவர்களை நோக்கி போர் படை அனுப்பப்பட்டதோ (அவர்களுக்கு) மூன்று முறை இஸ்லாத்தின் பக்கம் அழைப்பு விடுங்கள்; அவர்கள் ஏற்றுக் கொண்டால் நல்லது; இல்லையென்றால் போரிடுங்கள் என்று அன்னார் (ஸல்) ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களுக்கு கட்டளையிட்டிருந்தார்கள்.

அதாவது போரிட முயல்கின்றீர்கள் என்றால் பின்னர் நீங்கள் மூன்று முறை அவர்களுக்கு இஸ்லாத்தின் பக்கம் அழைப்பு விடுக்க வேண்டும். அதற்குப் பிறகும் கூட அவர்கள் போரிட விரும்பினால் நீங்கள் அவர்களுடன் போரிடலாம்.

ஆக காலித் (ரலி) அவர்கள் அவ்வாறே செய்தார்கள். அவர்கள் அனைவரும் முஸ்லிம் ஆகிவிட்டார்கள். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களுக்கு மத்தியில் தங்கினார்கள். தப்லீஃக் மட்டும் செய்தார்கள். போர் நடைபெறவில்லை. அவர்கள் அனைவரும் முஸ்லிம் ஆகி விட்டனர். ஹஸ்ரத் காலித் அவர்கள் அவர்களிடம்

தங்கினார்கள். அவர்களுக்கு இஸ்லாம், அல்லாஹ்வின் வேதம் மற்றும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய சுன்னத் ஆகியவற்றிற்கான போதனையை வழங்க ஆரம்பித்து விட்டார்கள். ஹஸ்ரத் காலித் அவர்களுக்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு இதைத்தான் கட்டளையிட்டிருந்தார்கள்.

இதற்குப் பிறகு ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் ஒரு கடிதத்தை ஹுஸூர் (ஸல்) அவர்களுக்கு அனுப்பி வைத்தார்கள். அதில் இவ்வாறு எழுதப்பட்டிருந்தது: ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு காலித் பின் வலீத் தரப்பிலிருந்து எழுதப்படுகின்ற கடிதம் ஆகும்.

السلام علیك یا رسولَ الله ورحمة الله وبركاته

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நான் அந்த இறைவனை புகழ்கின்றேன்; அவனைத் தவிர வணக்கத்திற்குரியவன் எவனும் இல்லை; اما بعد

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அல்லாஹ் தங்கள் மீது கருணையை இறக்குவானாக! தாங்கள் என்னை பனூ ஹாரிஸை நோக்கி அனுப்பினீர்கள்; மூன்று நாட்கள் அவர்களுக்கு இஸ்லாத்தின் அழைப்பு விடுக்க வேண்டும்; அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டால் அவர்களிடம் தங்கி இஸ்லாத்தின் கட்டளைகள் திருக்குர்ஆன் மற்றும் சுன்னத்தே ரஸூல் ஆகியவற்றை கற்றுக் கொடுக்கவும்; இஸ்லாத்தை ஏற்கவில்லை என்றால் அவர்களுடன் போரிடவும் என்று எனக்கு தாங்கள் கட்டளையிட்டிருந்தீர்கள்.

சில விஷயங்கள் விளக்கமாக கூறப்படாது. அல்லது மற்ற இடங்களில் சில விஷயங்கள் கிடைத்து விடுகின்றது. ஆனால் வலுக்கட்டாயமாக இஸ்லாத்தை ஏற்கச் செய்வது இஸ்லாத்தின் போதனை அல்ல. இதன் பொருள் யாதெனில் அவர்களுடன் உடன்படிக்கை செய்யாவிட்டால் அல்லது போரிடத் தொடங்கினால் பிறகு அவர்களுடன் போரிட உங்களுக்கு அனுமதி உள்ளது

ஆக, கூறுகின்றார்கள்: அவர்களிடம் சென்றேன் தங்களுடைய வழிகாட்டல் அடிப்படையில் மூன்று நாட்கள் அவர்களை இஸ்லாத்தை நோக்கி அழைப்பு விடுத்தேன்; மேலும் தூதுவர்களை அவர்களிடம் அனுப்பினேன். பனூ ஹாரிஸே! இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளுங்கள்; பாதுகாப்பாக இருப்பீர்கள். எனவே அம்மக்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். போரிலிருந்து விலகியிருந்தார்கள்.

தப்லீஃக் செய்தேன்; இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள்; போரில் இருந்து விலகியிருந்தார்கள் என்ற வார்த்தை இந்த விஷயத்தை தெளிவாக விளக்குகின்றது. அவர்கள் போரிடுவதில் முந்தி கொள்ளவில்லை. எதிர் தரப்பினர் போரிடவில்லை. இவர்களும் போரிட செல்லவில்லை. தப்லீஃக்கிற்காக சென்றார்கள். அதை செய்தார்கள்.

மேலும் எழுதுகின்றார்கள்: நான் இவர்களிடம் தங்கி உள்ளேன்; இவர்களுக்கு மார்க்கத்தினுடைய ஏவல், விலக்கல் மற்றும் இதர கட்டளைகளை கற்றுக் கொடுக்கின்றேன். இனி தங்களிடமிருந்து வருகின்ற கட்டளையை ஏற்று நடப்பேன்; அதன்படி அமல் செய்வேன்.

السلام علیك یا رسولَ الله ورحمة الله وبركاته

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் காலித் பின் வலீதினுடைய இந்த கடிதத்திற்கு பதில் இவ்வாறு அளித்தார்கள்:

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தரப்பிலிருந்து காலித் பின் வலீத் அவர்களுக்கு!

ஸலாம்! நான் இறைவனைப் புகழ்கின்றேன்; அவனைத் தவிர வணக்கத்திற்குரியவர் வேறு எவரும் இல்லை. اما بعد

உங்களுடைய கடிதம் தூதுவருடன் எனக்கு கிடைத்தது. பனூ ஹாரிஸ் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டனர் என்பது தெரியவந்தது. போருக்கு முன்பு லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மது ரஸூலுல்லாஹ் என சாட்சி அளித்துள்ளனர். இது இறைவனுடைய ஹிதாயத் ஆகும். இதை இறைவன் அவர்களுக்கு வழங்கியுள்ளான். எனவே நீர் அவர்களுக்கு இறைவனுடைய நற்கூலிக்கான நற்செய்தியை வழங்குவீராக! இறை தண்டனையிலிருந்து அச்சமூட்டுவீராக! நீர் அவர்களில் சில நபர்களை அழைத்துக் கொண்டு என்னிடம் வருவீராக! அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மதுல்லாஹி வ பரக்காத்துஹூ!

ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் இந்தக் கட்டளையை பார்த்தவுடன் பனூ ஹாரிஸுடைய சில நபர்களை அழைத்துக் கொண்டு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜரானார்கள். எவர்களை அழைத்து வந்தார்களோ அவர்களுடைய பெயர்கள் இவையாகும். கைஸ் பின் ஹுஸைன், யஸீத் பின் அப்துல் மதான், யஸீத் பின் முஅஜ்ஜல், அப்துல்லாஹ் பின் கராத், அப்துல்லாஹ், அம்ர் பின் அப்தில்லாஹ். இந்த மக்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் சபைக்கு வந்தபோது, அன்னார் இவர்களைப் பார்த்து இவர்கள் யார்? ஆசிய மக்களைப் போன்று தெரிகின்றது என்று கேட்டார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இவர்கள் பனூ ஹாரிஸைச் சார்ந்தவர்கள் என்று பதில் அளிக்கப்பட்டது. இந்த மக்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு ஸலாம் தெரிவித்தார்கள். மேலும் கூறினார்கள்: தாங்கள் அல்லாஹ்வின் தூதர் ஆவீர்கள் என்றும், அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவர் எவரும் இல்லை என்றும் நாங்கள் சாட்சியம் பகர்கின்றோம். பின்னர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நானும் அல்லாஹ்வை தவிர வணக்கத்திற்குரியவர் வேறு எவரும் இல்லை என்றும் சந்தேகம் இன்றி நான் அவனுடைய தூதர் ஆவேன் என்றும் சாட்சி கூறுகின்றேன்.

பிறகு அன்னார் (ஸல்) கூறினார்கள்: நீங்கள் அந்த மக்கள் தானே? தமது எதிரிகளுடன் சண்டையிடும்போது அவர்களை விரட்டி அடித்து விடக் கூடிய அந்த மக்கள் தானே நீங்கள்? என்று கேட்டார்கள். அந்த மக்கள் மௌனமாக இருந்தனர். அவர்களில் எவரும் பதில் அளிக்கவில்லை. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இரண்டாவது முறை மீண்டும் கூறினார்கள். பிறகும் அந்த மக்கள் மௌனமாக இருந்தார்கள். எவரும் முன்வரவில்லை. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மூன்றாவது முறை மீண்டும் கூறினார்கள். அவர்களில் எவரும் முன்வரவில்லை.ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் நான்காவது முறையாக மீண்டும், எதிரிகளுடன் சண்டையிடும் பொழுது அவர்களை விரட்டி விடுவீர்களே? அதாவது நீங்கள் உங்களை வலிமை மிக்க மக்களாக கருதினீர்களே? என்று கேட்டார்கள். அப்பொழுது, யஸீத் பின் அப்துல் மதான் அவர்கள் கூறினார். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! ஆம்! நாங்கள் அந்த மக்கள் தான்; எவர்களுடன் சண்டையிடுகின்றோமோ அவர்களை விரட்டி அடித்து விடுவோம்; நான்கு முறை அவர் இதை தெரிவித்தார். நாங்கள் போரிடக் கூடியவர்கள்; வீரமுள்ளவர்கள். ஆனால் இங்கு இது தலைகீழாக நிகழ்ந்துவிட்டது.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு விட்டீர்கள் என்று காலித் எனக்கு கடிதம் எழுதாமல் இருந்திருந்தால் நான் உங்கள் தலைகளை உங்கள் கால்களுக்கு கீழ் போட்டு இருப்பேன்.

அதற்கு, நாங்கள் தங்களுக்கோ அல்லது காலிதிற்கோ நன்றி செலுத்த கூடியவர்கள் கிடையாது என்று யஸீத் பின் அப்துல் மதான் கூறினார்.

புதியதாக இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருந்தார்கள். கூறுகின்றார்: நாங்கள் தங்களுக்கு நன்றி செலுத்த மாட்டோம்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: பிறகு யாருக்கு நன்றி செலுத்துவீர்கள்? அவர்கள் கூறினர்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நாங்கள் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்துகின்றோம்; அவன்தான் தங்கள் மூலமாக எங்களுக்கு நேர்வழி வழங்கினான்.

மிக நல்ல பதிலை இவர் அளித்திருந்தார்.

ஹஸ்ரத் நபி (ஸல்)



கூறினார்கள். நீங்கள் உண்மையை கூறினீர்கள். நீங்கள் அறியாமை காலத்தில் உங்கள் எதிரிகள் மீது எதன் காரணமாக வெற்றி பெற்றீர்கள் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அப்போது அவர் கூறினார்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நாங்கள் ஒன்றாக எதிரிகளுடன் போரிட்டோம்.

நாம் ஒன்றாக போரிட்டால் நமக்கு வெற்றி கிடைக்கும்; எவருக்கும் நம் மீது வெற்றி கிடைக்காது என்று அவர்கள் எண்ணினர்.

இஸ்லாம் வந்தபோது, இஸ்லாம் அனைத்து கோத்திரங்களையும் ஒன்றாக்கிவிட்டது. பல கோத்திரங்கள் ஓர் உயிராயின. அப்பொழுது இந்த மக்களும் ஒன்றாக இருக்கின்றார்கள் என்பது இவர்களுக்கு புரிய வந்தது. நாம் இவர்களுடன் போரிடக் கூடாது; இதுதான் சிறந்தது. இன்னும் சொல்வதென்றால் போர் மட்டும் அல்ல; இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஏனென்றால் இதுவே உண்மை மார்க்கமாகும்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கைஸ் பின் ஹுஸைன் அவர்களை பனூ ஹாரிஸுடைய அமீராக நியமித்தார்கள். ஷவ்வால் இறுதியில் அல்லது துல் கஅதா உடைய துவக்கத்தில் இம்மக்களை அனுப்பி வைத்தார்கள். இவர்கள் தமது சமுதாயத்தை சென்றடைந்த நான்கு மாதத்திற்கு பிறகு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மரணமடைந்தார்கள். (அஸ்ஸீரத்துல் ஹல்பியா லி இப்னி ஹிஷாம், பக்கம் 861 - 863, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத், லெப்னான் 2001-ம் ஆண்டு)

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மேற்கொண்ட இறுதிப் போர் தபூக் போர் ஆகும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இறுதியாக அனுப்பி வைத்த போர் படை உஸாமா உடைய போர் படை ஆகும்.

உஸாமா போர் படை பற்றி வருகின்றது. ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களின் குறிப்பில் ஏற்கனவே கூறப்பட்டது. இருப்பினும், சுருக்கமாக அதனுடைய பின்னணியுடன் இங்கு எடுத்துக் கூறி விடுகின்றேன்.

புஹாரியில் அறிவிப்பு வருகின்றது: ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஸஅத், ஜாஃபர் மற்றும் அப்துல்லாஹ் இப்னு ரவாஹா ஆகியோருடைய மரண செய்தியை மக்களுக்கு வழங்கினார்கள். அதுவும் மக்களிடம் அவர்கள் தொடர்பாக ஒரு தகவல் கிடைப்பதற்கு முன்பே அவர்களுடைய மரண செய்தியை மக்களுக்கு வழங்கினார்கள்.

இதற்கு முன்பு, உஸாமா படையெடுப்பிற்கு முன்பு ஒரு படை சென்றிருந்தது. அன்னார் (ஸல்) கூறினார்கள்:

ஸஅத் கொடியை வாங்கினார்; அவர் ஷஹீதாவிட்டார். பிறகு ஜஃபர் பிடித்தார்; அவரும் ஷஹீதாவிட்டார். பிறகு இப்னு ரவாஹா கொடியை பிடித்தார்; அவரும் ஷஹீதாகி விட்டார். அன்னாருடைய கண்களில் கண்ணீர் வழிந்தோடியது. இறுதியில் அல்லாஹ்வுடைய வாள்களில் ஒரு வாளான காலித் பின் வலீத் கொடியை வாங்கினார். எது வரை என்றால் அல்லாஹ் அவர்களுக்கு எதிரியின் மீது வெற்றி வழங்கினான். (ஸஹீஹுல் புஹாரி, கிதாபுல் மனாகிப், பாப் மனாகிப், காலித் பின் வலீத் (ரலி) ஹதீஸ் எண்: 3757)

ஹஜ்ஜத்துல் விதாவிலிருந்து ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மதீனா திரும்பி வந்த பொழுது, மதீனா வாசிகளுக்கு தெற்கிலிருந்து எந்த எதிரியின் அபாயமும் இருக்கவில்லை; ஆனால் வடக்கிலிருந்து ரோமானியர்களின் தரப்பிலிருந்து எப்பொழுதும் அபாயம் இருந்து வந்தது. ஏனென்றால் அந்த கிறிஸ்தவர்களுக்கு அதுவரை அவர்களுடைய ஆற்றல் மீது ஆணவம் இருந்தது. ஆகையால் எந்நேரமும் அவர்களிடமிருந்து தாக்குதல் நடக்கலாம். மேலும் மூத்தா போரின் ஷஹீதுகளுக்காக பழிவாங்க வேண்டியது இருந்தது. ஏனென்றால் அந்தப் போரில் ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களுடைய புலமையின் காரணமாக முஸ்லிம்களுடைய படை மதீனாவிற்கு திரும்பி வருவதில் வெற்றி கண்டிருந்தது.

MUNEEF
TRADING COMPANY
IRON & STEEL MERCHANT
Y. Jafarullah
+91 97104 19554
+91 79047 15716
89/11, Shanmugapuram
5th (6th Corner) Street
Thiruvotriyur, Chennai 19
muneefsteeltc@gmail.com
GSTN: 33ALSPJ9110D1Z9

ஹஜ்ஜை நிறைவேற்றிய பிறகு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மதீனா வருகை தந்து அதிக நாட்கள் கழிந்திருக்கவில்லை. அதற்குள், சில நாட்களுக்கு பிறகு உஸாமா அவர்களின் தலைமையில் ஒரு படைக்கு சிரியா மீது தாக்குதல் தொடுக்க கட்டளையிட்டார்கள். (முஹம்மது ஹுஸைன் ஹேக்கல் அவர்களின் மொழியாக்க நூல், ஹயாதே முஹம்மது (ஸல்), பக்கம் 597)

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய மரணத்திற்கு இரண்டு தினங்களுக்கு முன்பு சனிக்கிழமையன்று உஸாமா அவர்களுடைய படையின் ஆயத்தம் முழுமையடைந்தது. இதனுடைய ஆயத்தம் அன்னார் (ஸல்) நோய்வாய்ப்படும் முன்பு துவங்கியது. ஸஃபர் மாதத்தின் இறுதியில் ரோமானியர்களுடன் போரிட ஆயத்தம் செய்ய அன்னார் (ஸல்) கட்டளையிட்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களை அழைத்து கூறினார்கள்: உம்முடைய தந்தை ஷஹீதான இடத்திற்கு செல்வாயாக! அதாவது, ஹஸ்ரத் ஸைத் எங்கு ஷஹீத் ஆக்கப்பட்டாரோ முதலில் அங்கு செல்லுங்கள்; அவர்களை அதாவது எதிரிகளை குதிரைகளைக் கொண்டு நசுக்கி விடுங்கள்; நான் உங்களை அந்த படையின் அமீராக நியமித்துள்ளேன். (ஃபத்ஹுல் பாரீ லி இப்னி ஹிஜ்ர், தொகுதி 8, பக்கம் 192, கதீமீ குதுப் கானா, ஆராம் பாஃக் கராச்சி)

ஓர் அறிவிப்பில் வருகின்றது:

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: பல்கா மற்றும் தாரூமை குதிரைகளை கொண்டு நசுக்கி விடுங்கள். பல்கா என்பது சிரியா நகரத்தினுடைய ஒரு பகுதியாகும். இது டமாஸ்கஸ் மற்றும் குரா பள்ளத்தாக்கிற்கு இடையில் உள்ளது. தாரூம் எகிப்து செல்லும் வழியில் பாலஸ்தீனில் காஸாவை அடுத்த ஒரு பகுதியாகும். மேலும் சிரியாவை நோக்கி புறப்படுமாறு கூறும்போது கூறினார்கள். பொழுது விடிந்த உடனே உப்னா வாசிகள் மீது தாக்குதல் தொடுங்கள். உப்னா என்பது சிரியா நாட்டில் பல்காவிற்கு அருகாமையில் அமைந்துள்ள ஓர் இடத்தின் பெயராகும். அவர்களுக்கு செய்தி கிடைக்கும் முன்பே விரைவாக பயணம் செய்து சென்றடையுங்கள் என்று கூறினார்கள். இறைவன் உங்களுக்கு வெற்றியை அளித்தான் என்றால், அங்கு குறைவாக தங்குங்கள்; தங்களுடன் வழிகாட்டுபவரை அழைத்துச் செல்லுங்கள். மேலும் உளவாளிகளையும், செய்தி வழங்கக்கூடியவர்களையும் உங்களுக்கு முன்பு அனுப்பி வையுங்கள்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களுக்காக தம்முடைய கரத்தால் ஒரு கொடியை கட்டினார்கள். பிறகு அல்லாஹ்வின் பெயரால் அவனுடைய பாதையில் போரிடுங்கள்; யாரெல்லாம் அவனை நிராகரிக்கின்றார்களோ அவர்களுடன் போர் புரியுங்கள்; நம்பிக்கை துரோகம் செய்யாதீர்கள்; குழந்தைகள், பெண்களை கொலை செய்யாதீர்கள்; எதிரிகளுடன் போரிடுவதை விரும்பாதீர்கள் என்று கூறினார்கள்.

இந்த வாக்கியம் எதிரியின் தாக்குதலை எதிர்ப்பதன் பக்கம் சுட்டி காட்டுகின்றது. அதாவது எதிரி போர் தொடுத்தால் நீங்கள் போர் தொடுங்கள்; ஆனால் நீங்கள் எதிரியுடன் போர் புரிவதை விரும்பாதீர்கள்; நிச்சயமாக இதன் காரணமாக நீங்கள் சோதிக்கப்படுவீர்கள் என்று உங்களுக்கு தெரியாது. எனவே இறைவா! இவர்களுக்கு எதிரில் நீயே எங்களுக்கு போதுமானவன் ஆவாய்; நீ விரும்பினால் இவர்களுடைய போரை எங்களிடமிருந்து அகற்றி வை என்று நீங்கள் கூறுங்கள். போர் அவசியமில்லை மேலும் போர் தவிர்க்கப்பட முடியும் என்றால் விலக்கி வை! என்ற துஆவையும் கற்றுக் கொடுத்தார்கள்.

ஆக, அவர்கள் உங்களுடன் மோதினால், அதாவது, இதன் பிறகும் போர் வந்து விட்டால், மேலும் அவர்கள் ஒன்றாக சேர்ந்து கூச்சல் எழுப்பினால் பிறகு நீங்கள்

கண்ணியத்தோடு அமைதியாக இருப்பது உங்கள் மீது அவசியமாகும். ஆனால், அதன் பிறகும், போர் நிகழ்ந்து விட்டால், பிறகு அமைதியாகவும், கண்ணியத்துடனும் போரிடுங்கள்; மேலும், நீங்கள் உங்களுக்கிடையில் சண்டையிடாதீர்கள்; அவ்வாறானால் நீங்கள் கோழைகளாகி விடுவீர்கள்; உங்களுடைய ஆதிக்கமும், அச்சமும் இல்லாமல் போய்விடும். உங்களுக்குள் ஒற்றுமையை உருவாக்குங்கள்.

மேலும், அல்லாஹ்வே! நாங்கள் உன்னுடைய அடியார்கள் ஆவோம்; அவர்களும் உன்னுடைய அடியார்கள் ஆவர். எங்களுடைய நெற்றிகளும், அவர்களுடைய நெற்றிகளும் உன் வசமே உள்ளது. மேலும் நீயே எங்களுக்கு போதுமானவன் என்று நீங்கள் கூறுங்கள். மேலும் சொர்க்கம் வாள்களின் நிழலின் கீழ் உள்ளது என்பதை அறிந்து கொள்ளுங்கள் .

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் கைகளால் கட்டிய கொடியை வாங்கிக் கொண்டு ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்கள் புறப்பட்டார்கள். மேலும், அதனை ஹஸ்ரத் புரைதாஹ் பின் ஹுஸைப் (ரலி) அவர்களிடம் ஒப்படைத்தார்கள். மேலும் ஜுர்ஃப் எனுமிடத்தில் படையை ஒன்று திரட்டினார்கள். ஜுர்ஃப் மதீனாவிலிருந்து மூன்று மைல் தொலைவில் வடக்குப் பக்கம் அமைந்துள்ள ஓர் இடமாகும். முஹாஜிர் மற்றும் அன்ஸாருடைய கண்ணிய மிக்க எந்தவொரு நபரும் இந்த போருக்காக அழைக்கப்படாமல் இருக்கவில்லை. அவர்களில் ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி), ஹஸ்ரத் உமர் (ரலி), ஹஸ்ரத் அபூ உபைதா இப்னு ஜர்ராஹ் (ரலி), ஹஸ்ரத் ஸஅத் இப்னு அபீ வக்காஸ் (ரலி), ஹஸ்ரத் ஸயீத் இப்னு ஸைத் (ரலி), ஹஸ்ரத் கதாதா இப்னு நுஃமான் (ரலி), ஹஸ்ரத் ஸல்மான் இப்னு அஸ்லம் (ரலி) ஆகியோரும் இருந்தனர். அனைவரும் ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களின் தலைமையின் கீழ் இணைக்கப்பட்டிருந்தார்கள்.

சில மக்கள் பேசத் தொடங்கி விட்டார்கள். மேலும் கூறினர்: இந்த சிறுவன் ஆரம்பகால முஹாஜிர்கள் மீது அமீர் ஆக்கப்படுகின்றான்; இவர்களில் பெரும், பெரும் ஸஹாபிகள் இருக்கின்றனர். அவர்களுக்கு இந்த சிறுவனை அமீராக்கி விட்டார்கள். அன்னார் (ஸல்) வரை இந்த விஷயம் சென்று அடைந்தது. அப்போது, இவ்விஷயத்தின் மீது இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கடும் அதிருப்தி அடைந்தார்கள். மேலும், அன்னார் (ஸல்) தம்முடைய தலையை ஒரு கைக்குட்டையால் கட்டியிருந்தார்கள். மேலும் ஒரு போர்வையை போர்த்திருந்தார்கள். அன்னார் (ஸல்) சொற்பொழிவு மேடை மீது ஏறி, இறைவனுடைய தூய்மையை எடுத்துரைத்து மேலும் இறைவனை புகழ்ந்த பிறகு கூறினார்கள்:

மக்களே! உஸாமாவை அமீர் ஆக்கியது தொடர்பாக உங்களுடைய சிலரின் பேச்சு என்னை வந்தடைந்துள்ளது. நான் உஸாமாவை அமீர் ஆக்கியது தொடர்பாக உங்களுக்கு ஆட்சேபனை இருக்கிறது என்றால், இதற்கு முன்பு இவருடைய தந்தையை என்னுடைய அமீர் ஆக்கியதிலும், உங்களுக்கு ஆட்சேபனை இருந்துள்ளது. இறைவன் மீது ஆணையாக! அவரும் தலைமைத்துவத்திற்கு தகுதியானவராக இருந்தார்; அவருக்கு பிறகு அவருடைய மகனும் தலைமைத்துவத்திற்கு தகுதியானவராக இருக்கின்றார். அவர் எனக்கு மிகவும் நேசத்திற்குரிய நபர்களை சேர்ந்தவராக இருந்தார். நிச்சயமாக இவர்கள் இருவரும் எத்தகையோரென்றால், இவர்களிடம் எல்லாவிதமான நன்மை மற்றும் பயன்களை எதிர்பார்க்கலாம். எனவே, அவர் (அதாவது உஸாமா) பொருட்டு நன்மையான அறிவுரையைப் பின்பற்றுங்கள். ஏனெனில், இவர் உங்களில் மிகச் சிறந்த மக்களைச் சார்ந்தவர் ஆவார்.

உஸாமா அவர்களுடன் புறப்பட்டுக் கொண்டிருந்த அந்த முஸ்லிம்கள் ஹஸ்ரத்நபி (ஸல்) அவர்களிடமிருந்து விடைபெற்று ஜுர்ஃப் இடத்திற்குச் சென்று படையுடன் கலந்து கொள்ள சென்று கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய நோய் அதிகமானது; எனினும், அன்னார் (ஸல்), உஸாமா (ரலி) அவர்களின் படையை அனுப்பி வையுங்கள்; எவ்வாறாயினும் இது புறப்படும் என்று வலியுறுத்தி வந்தார்கள். ஞாயிற்றுக்கிழமை அன்னாருக்கு வேதனை அதிகமாகிவிட்டது. ஹஸ்ரத் உஸாமா படையிலிருந்து திரும்பி வந்தார்கள். அப்பொழுது அன்னார் (ஸல்) மயக்க நிலையில் இருந்தார்கள். (நோய்) அதிகமான போது அன்னாருக்குச் செய்தி அனுப்பி வைக்கப்பட்டது; அன்னார் திரும்பி வந்தார்கள். அந்த நாளில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு மக்கள் மருந்தளித்தார்கள் .ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்கள் சிரம் தாழ்த்தி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு முத்தமிட்டார்கள். அன்னாரால் பேச முடியவில்லை. ஆனால் அன்னார் (ஸல்) தமது இரு கரங்களையும் விண்ணை நோக்கி உயர்த்தி, ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களின் தலையின் மீது கை வைத்து வந்தார்கள். அன்னார் (ஸல்) எனக்காக துஆ செய்கின்றார்கள் என்று நான் புரிந்து கொண்டேன். ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்கள் படையை நோக்கி திரும்பினார்கள். ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்கள் திங்கட்கிழமை மீண்டும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் வந்தார்கள்; அப்பொழுது அன்னார் (ஸல்) நிலைமை முன்னேற்றம் அடைந்திருந்தது. அல்லாஹ்வின் அருளினால் புறப்பட்டு விடுங்கள் என்று அன்னார் (ஸல்) உஸாமா (ரலி) அவர்களிடம் கூறினார்கள். ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடமிருந்து விடைபெற்று தம்முடைய படையை நோக்கி புறப்பட்டார்கள். மக்களுக்கு புறப்படுமாறு கட்டளையிட்டார்கள். அன்னார் (ரலி) புறப்பட எண்ணிய போது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் இறுதி தருணமாக தோன்றுகின்றது என்ற தூதுச் செய்தியை அன்னாருடைய தாயார் உம்மே அய்மன் தரப்பிலிருந்து ஒரு மனிதர் செய்தி எடுத்துக் கொண்டு வந்தார். இதனால் ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் வந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அபூ உபைதாஹ் (ரலி) ஆகியோரும் உடன் இருந்தார்கள். அன்னார் (ஸல்) மரண தருவாயில் இருந்தார்கள். சிறிது நேரத்திலேயே அன்னார் (ஸல்) மரணமடைந்து விட்டார்கள். இதன் காரணமாக முஸ்லிம்களுடைய படை ஜுர்ஃப் என்ற இடத்திலிருந்து மதீனா திரும்பியது. மேலும் ஹஸ்ரத் புரைதாஹ் இப்னு ஹுஸைப் (ரலி) ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களின் கொடியை எடுத்து வந்தார்கள். அதனை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வாசலில் நாட்டினார்கள்.

ஓர் அறிவிப்பின் அடிப்படையில் ஹஸ்ரத் உஸாமாவின் படை ஜுருஃப் என்ற இடத்தில் இருந்த போது நபி (ஸல்) அவர்களின் மரணம் நிகழ்ந்தது. ஜுருஃப் மதீனாவிலிருந்து ஓர் இரவின் பயணத் தொலைவில் அமைந்துள்ளது; சிரியாவுடைய வழிப்பாதையில் உள்ள பள்ளத்தாக்காகும்.

எவ்வாறு இருப்பினும் இவர்கள் திரும்பி வந்துவிட்டார்கள்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய மரணத்திற்கு பிறகு ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களிடம் பைஅத் செய்யப்பட்டது. ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள், கொடியை எடுத்துக் கொண்டு உஸாமா (ரலி) அவர்களுடைய வீட்டிற்கு செல்லுங்கள்;மேலும் அவர் தம்முடைய நோக்கத்திற்காக புறப்படட்டும் என்று புரைதாஹ் பின் ஹுஸைப் (ரலி) அவர்களுக்கு கட்டளையிட்டார்கள். ஹஸ்ரத் புரைதாஹ் (ரலி) அவர்கள் கொடியை எடுத்துக்கொண்டு படையின் முன்பகுதிக்கு வந்தார்கள்.

(தாரிக்குத் தப்ரீ, தொகுதி 2, பக்கம் 224, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

அந்தப் படையின் எண்ணிக்கை 3000 என்று கூறப்படுகின்றது. அதில் ஆயிரம் குதிரை வீரர்கள் இருந்தனர்.

Proprietor off : 044- 2260 1886
RAZIK XEROX & TELECOM
AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX

➢ PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
➢ LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
➢ SCANNING, RECHARGE, COLOUR XEROX,
➢ ALL VEHICLE INSURANCE, COURIER
NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com


மற்றோர் அறிவிப்பின் அடிப்படையில் ஹஸ்ரத் உஸாமா பின் ஸைத் (ரலி) அவர்கள் 700 நபர்களுடன் சிரியாவை நோக்கி அனுப்பி வைக்கப்பட்டார்கள்.

மற்றோர் அறிவிப்பில் வருகின்றது. இறைத் தூதர் (ஸல்) அவர்கள் மரணமடைந்த இரண்டாவது நாளன்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இவ்வாறு அறிவிப்பு செய்தார்கள்: உஸாமா உடைய பணி நிறைவேறும் உஸாமாவின் படை முழுமை பெறும். உஸாமா அவர்களுடைய படையிலிருந்த எந்த நபரும் மதீனாவில் இருக்கக் கூடாது. அனைவரும் ஜுர்ஃபில் அவர்களுடைய படையில் சேர்ந்து கொள்ளுங்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மரணமடைந்தபோது முழு அரபும் முர்தத் ஆகிவிட்டது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் போன்ற வீர மிக்க மனிதர்களும் இந்த குழப்பத்தை கண்டு பதற்றம் அடைந்தார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தம்முடைய மரணத்திற்கு அருகாமையில் ரோமானிய பகுதியின் மீது தாக்குதல் தொடுக்க ஒரு படையை ஆயத்தம் செய்தார்கள். ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களை அதற்கு அமீராக நியமித்தார்கள். இந்தப் படை புறப்படும் முன்பே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மரணமடைந்து விட்டார்கள். அன்னாருடைய மரணத்திற்குப் பிறகு அரேபியா முர்தத் ஆகிவிட்டது. ஸஹாபிகள் இப்படிப்பட்ட குழப்பமான நிலையில் உஸாமா (ரலி) அவர்களுடைய படை ரோமானிய பகுதியை தாக்குதல் தொடுக்க அனுப்பி வைக்கப்பட்டால், பிறகு மதீனாவில் பின்னால் வெறும் வயதான ஆண்களும், குழந்தைகளும், பெண்களுமே மீதம் இருப்பார்கள். மேலும் மதீனாவை பாதுகாக்க எந்த வழிவகையும் இல்லை என்று எண்ணினார்கள்.

ஆகையால் அவர்கள் பெரும் ஸஹாபிகளின் ஒரு குழு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் சென்று குழப்பங்கள் அகலும் வரை இந்த படையை தடுத்து வையுங்கள் என்று விண்ணப்பிக்கலாம் என்று தீர்மானித்தார்கள். எனவே ஹஸ்ரத் உமர் (ரலி) மற்றும் மற்ற பெரும், பெரும் ஸஹாபிகள் அன்னாரிடம் சென்றார்கள். குழப்பங்கள் அகலும் வரை அதை தடுத்து நிறுத்துங்கள் என்று விண்ணப்பித்தனர். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இந்த கூற்றைக் கேட்டவுடன் மிகவும் கோபத்தோடு அந்தக் குழுவினருக்கு இந்த பதிலை வழங்கினார்கள். அதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களுடைய மரணத்திற்குப் பிறகு, அபூ கஹாஃபாவுடைய மகன் அதாவது அபூபக்ர் முதன் முதலில் இந்த பணியை செய்வதா? அதாவது எந்த படையை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் புறப்பட கட்டளையிட்டார்களோ அதை நான் தடுத்து நிறுத்துவதா? மேலும் அன்னார் (ரலி) கூறினார்கள்: இறைவனின் மீது ஆணையாக! எதிரியின் படை மதீனாவில் நுழைந்து, முஸ்லிம் பெண்களுடைய பிணங்களை நாய்கள் இழுத்துச் சென்றாலும் எந்த படையை இறைத் தூதர் (ஸல்)அவர்கள் அனுப்பி வைக்க தீர்மானித்திருந்தார்களோ அந்தப் படையை நான் தடுத்து நிறுத்த மாட்டேன்.




ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் இந்த வீரமும், தைரியமும் இந்தக் காரணத்தால் பிறந்தது. இறைவன் கூறுகின்றான்:

مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰهِ وَالَّذِيْنَ

اَشِدَّآءُ عَلَى الْكُفَّارِ

அதாவது, ஒரு சாதாரண கம்பி மின்சாரத்தோடு சேரும் போது, அதில் மாபெரும் ஆற்றல் உருவாகிவிடுவதைப் போன்று, முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் கொண்டிருந்த தொடர்பின் காரணமாக அன்னாரை ஏற்றுக் கொள்பவர்களும்,

مَعَهٗۤ اَشِدَّآءُ عَلَى الْكُفَّارِ

என்பதை உண்மைப்படுத்தக் கூடியவர்களாகி விட்டனர்.

பொருள்: நிராகரிப்பாளர்களுக்கு எதிரில் அவர்கள் கடுமையானவர்களாக இருப்பர். (ஸேரே ரூஹானீ,(6), அன்வாருல் உலூம், தொகுதி 22, பக்கம் 593 - 594)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் உஸாமா (ரலி) அவர்களின் படை புறப்படுவது தொடர்பாக ஸிர்ருல் கிலாஃபத் என்ற தம்முடைய உன்னதமான நூலில் கூறுகின்றார்கள்:

இப்னு அஸீர் தமது வரலாற்று நூலில் எழுதுகின்றார்: ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) மரமணடைந்தபோது அன்னாருடைய மரணத்தினுடைய செய்தி மக்கா மற்றும் அதனுடைய கவர்னர் அத்தாப் பின் அஸீதுக்கு கிடைத்தபோது, அத்தாப் ஒளிந்து கொண்டார். மக்கா அதிர்ந்தது. மக்காவாசிகள் முர்தத்தாக சாத்திய கூறுகள் இருந்தன. மேலும் கூடுதலாக எழுதப்பட்டுள்ளது: அரேபியா முர்தத்தாகி விட்டது. ஒவ்வொரு கோத்திரத்திலிருந்தும் பொதுமக்களும், முக்கிய பிரமுகர்களும் முர்தத்தாகி விட்டார்கள். மேலும் நயவஞ்சகம் வெளிப்பட்டு விட்டது. யூதர்களும், கிறிஸ்தவர்களும் கொஞ்சம் கொஞ்சமாக தலை தூக்க ஆரம்பித்தனர். அதாவது தற்போது முஸ்லிம்கள் பலவீனமடைந்து விட்டார்கள்; இனி நம்மால் தாக்குதல் தொடுக்க முடியும் என்று பார்த்துக் கொண்டிருந்தார்கள். மேலும் முஸ்லிம்களை தங்களுடைய நபியின் மரணத்தின் காரணமாகவும், தங்களுடைய குறைந்த எண்ணிக்கை மற்றும் எதிரில் அதிகமான எதிரிகளின் காரணமாகவும் நிலைமை எப்படி ஆகிவிட்டது என்றால், மழை பொழியும் இரவில் செம்மறி ஆடுகளின் நிலை போன்று ஆகிவிட்டது.

அதாவது அந்த ஆடுகள் நனைந்திருக்கும்; அங்கும், இங்கும் அசைவதற்கு ஆற்றல் அற்றதாக இருக்கும்.

இதனால் மக்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் இவ்வாறு கூறினார்கள்: அதாவது இந்த மக்கள் உஸாமா அவர்களின் படையையே முஸ்லிம்களின் படை என்று கருதுகின்றார்கள். தாங்கள் கண்டு கொண்டிருப்பது போன்று, அரேபியர்கள் தங்களுடன் கிளர்ச்சி செய்து விட்டார்கள். எனவே முஸ்லிம்களுடைய இந்தக் கூட்டத்தை தங்களிடமிருந்து பிரிப்பது உகந்ததல்ல.

இதனால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எவன் கையில் எனது உயிர் உள்ளதோ அவன் மீது ஆணையாக! மிருகங்கள் என்னை கவ்வி விடும் என்ற நம்பிக்கை இருந்தாலும், அப்பொழுதும் நான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய கட்டளையின்படி உஸாமா (ரலி) அவர்களின் படையை நிச்சயமாக அனுப்புவேன்; எதை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தீர்மானித்தார்களோ அதனை என்னால் ரத்து செய்ய முடியாது.

சுருக்கமாக, அன்னார் (ரலி) ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய கட்டளையை அதன் உரிமைக்கு ஏற்றவாறு நிலை நாட்டினார்கள். (அதனை) அமல்படுத்தினார்கள். எந்த ஸஹாபிகள் உஸாமா அவர்களுடைய படையில் இருந்தார்களோ அவர்களை மீண்டும் படையில் இணையுமாறு அவர்களுக்கு வழிகாட்டல் வழங்கினார்கள். அன்னார் (ரலி) கூறினார்கள்: எவர்கள் ஹஸ்ரத் உஸாமாவின் படையில் இருந்தார்களோ எவர்களுக்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் படையில் இணையுமாறு வழிகாட்டல் வழங்கினார்களோ அவர்கள் ஒருபோதும் பின்தங்கக் கூடாது; மேலும் அவர் பின்தங்க நான் அனுமதியேன். அவர் நடந்து செல்ல நேரிட்டாலும் நிச்சயமாக அவர்களுடன் செல்ல வேண்டும். அவர்களில் எவரும் பின்தங்க கூடாது. அதாவது அனைவருமே செல்ல வேண்டும்.

எவ்வாறு இருப்பினும், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இந்த படையை அனுப்பியது தொடர்பாக இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுடைய கட்டளையின் அடிப்படையில் உஸாமாவின் படை ஜுர்ஃப் என்ற இடத்தில் ஒன்றுகூடியது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) சுயமே அங்கு சென்றார்கள். அங்கு சென்று அந்தப் படையை ஆய்வு செய்தார்கள். அதை ஒழுங்குபடுத்தினார்கள்.

இது தொடர்பாக இந்தக் குறிப்பும் கிடைக்கின்றது. அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களிடம் கூறினார்கள்: நீங்கள் உகந்ததாக கருதினால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை என்னுடைய பணிகளின் உதவிக்காக விட்டு விடுங்கள்;

ஏனெனில் அன்னாரும், அந்த படையில் இணைந்து இருந்தார்கள். எனவே உஸாமா (ரலி) அவர்கள் அனுமதி வழங்கி விட்டார்கள். இந்த சம்பவத்திற்கு பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எப்பொழுதெல்லாம் ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களை சந்திப்பார்களோ, எதுவரைவென்றால் கலீஃபாவாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகும் கூட அன்னாரை சந்திக்கும்பொழுது

السلام عليك ايها الامير

என்று கூறிவந்தார்கள். அதற்கு,

غَفَرَ اللّٰهُ لَكَ

என்று உஸாமா பதிலளிப்பார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் உஸாமா அவர்களுக்கு தமது வழிகாட்டல்களுடன் இதனையும் கூறியிருந்தார்கள்: அதாவது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் உமக்கு வழங்கிய கட்டளைகள் அனைத்தையும் நிறைவேற்றுங்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கட்டளை நிறைவேற்றுவதில் எவ்வகையான

கவனமின்மையையும் காட்டாதீர்கள்.

போரின் விளக்கம் முன்பும் கூறப்பட்டு விட்டது அதை நான் விடுகின்றேன்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறியதுபோன்று, இந்த படை வெற்றியுடன் திரும்பியது. எதிரி கொல்லப்பட்டான் அல்லது கைது செய்யப்பட்டான். இந்தப் போரில் எந்தவொரு முஸ்லிமிற்கும் உயிர்சேதம் ஏற்படவில்லை.

அறிவிப்பின் அடிப்படையில், இந்த படை 40 முதல் 70 நாட்கள் வெளியில் இருந்த பிறகு மதீனா திரும்பி வந்து சேர்ந்தது. மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு அன்பு இருந்தது. எனவே ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எந்த கொடியை தம்முடைய கரங்களினால் உஸாமா அவர்களுக்காக கட்டினார்களோ அந்த கொடியை அபூ கஹாஃபாவுடைய மகன் எவ்வாறு அவிழ்ப்பான்?. எனவே உஸாமுடைய படை வந்தவுடன் அந்த கொடி அவிழ்க்கப்படவில்லை ஹஸ்ரத் உஸாமா அவர்கள் மரணம் அடையும் வரை அந்த கொடி அன்னாருடைய வீட்டில் அன்னாரிடமே இருந்தது.

اللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَّآلِ مُحَمَّدٍ

போர்களைப் பற்றிய இந்தக் குறிப்பு நிறைவு பெற்றது. இனி வாழ்க்கை வரலாற்றின் வேறு சில அம்சங்களை இன்ஷா அல்லாஹ் பார்ப்பேன்.

இப்பொழுது நான் இரண்டு மர்ஹூம்களைப் பற்றி கூறுவேன். அவர்களுக்கு ஜனாஸா தொழ வைப்பேன் இன்ஷா அல்லாஹ். ஜமாஅத்தின் முரப்பியான மதிப்பிற்குரிய அஸிஸீர் ரஹ்மான் காலித் ஸாஹிப் கடந்த நாட்களில் அமெரிக்காவில் 79 வயதில் மரணமடைந்து விட்டார்கள்.

اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْنَ

மர்ஹூமுடைய தாய் வழிப் பாட்டனார் ஹஸ்ரத் மியான் ரங் அலீ ஸாஹிப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஸஹாபி ஆவார்கள். அஸீஸுர் ரஹ்மான் காலித் ஸாஹிப் அவர்கள் ஜாமிஆவில் சேர்ந்த சம்பவம் இவ்வாறு வருகின்றது. கூறுகின்றார்கள்: .நான் ஏழாம் வகுப்பில் இருந்தபோது, ஒரு நாள் தஃலீமுல் இஸ்லாம் உயர்நிலைப் பள்ளியில் நடந்த அசெம்ப்ளியில் ஹஸ்ரத் மவ்லானா காஜி முஹம்மது நஸீர் சாஹிப் (ரலி) அவர்கள் வந்தார்கள். அவர்கள் வாழ்க்கையை அர்ப்பணித்தலின் அவசியம் மற்றும் முக்கியத்துவமும் பற்றி உரையாற்றினார்கள். இந்த உரை பல மாணவர்களிடம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. உரை முடிந்த உடனே மர்ஹூம் அவர்களுக்கு வாழ்க்கையை அர்ப்பணிக்க வேண்டும் என்ற உணர்வு பெருகியது. அன்னார் உடனே ஜாமிஆவிற்கு சென்றார். அங்கே நடைபெற்ற சிறிய இன்டர்வியூ பிறகு 1960ஆம் ஆண்டு அவருக்கு ஜாமிஆவில் சேர்க்கை கிடைத்தது. பின்னர் 1969 ஆம் ஆண்டு ஜாமிஆவில் இருந்து அன்னார் ஷாஹித் பட்டத்தை பெற்றார்கள். ஜாமிஆவில் மொத்தம் ஒன்பது வருடங்கள் ஆனதற்குக் காரணம், அன்னார் ஒரு ரயில் விபத்தில் சிக்கி மிகவும் காயமடைந்தார்கள். அந்த விபத்தின் காரணமாக இரண்டு ஆண்டுகள் வீணாகிவிட்டன. இருந்தாலும் அன்னார் மனம் தளரவில்லை. மேலும் அன்னாரது உயிரும் காப்பாற்றப்பட்டது. அன்னார் எப்போதும் கூறிவந்ததும் என்னவென்றால், மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் துஆவினால் எனது வாழ்க்கை காப்பாற்றப்பட்டது

இவர் முபல்லிஃக் ஆன பின் சியாராலியோன், நைஜீரியா, கானா, தன்ஸானியா, ஸன்சிபார் போன்ற வெளிநாடுகளில் பணியாற்றினார்கள். பாகிஸ்தானிலும் பல இடங்களில் முரப்பியாக பணியாற்றினார்கள். அதன் பின்னர் திரும்பி வந்த பிறகு ரப்வா நகரில் வக்காலத்து இஷாத் துறையில் பணியாற்றும் வாய்ப்பு கிடைத்தது.

இவருடைய மகள் வழிப் பேரன் ஹம்ஸா உபைதுல்லாஹ் தற்போது முரப்பியாக ஜாமிஆவில் இருந்து வெளிவந்துள்ளார். அவர் கூறுவதாவது, அஸிஸீர் ரஹ்மான் ஸாஹிப் அவர்கள் ஆஃப்ரிக்காவில் சில நேரங்களில், வெறும் அரிசியை வேகவைத்து அதன் மீது உப்பு தூவி அதையே சாப்பிட வேண்டிய சூழலும் இருந்தது. குழம்பு போன்றவை இல்லாமல் இருந்தது அல்லது மற்ற உணவுப் பொருட்களும் கிடைக்காத நாட்களும் இருந்தன. சில சமயம் எப்படிப்பட்ட நிலை இருந்தது என்றால் சாதாரண உணவும் கிடைக்காது. எளிதாக வேக வைத்த அரிசியும் கிடைக்காது. சில நேரங்களில் பல நாட்கள் பசியுடன் இருக்க வேண்டிய சூழலும் இருந்தது என்று எப்பொழுதும் கூறி வந்தார்கள்.

இவை அனைத்தும் அந்த ஆரம்பகால முரப்பிமார்களும் முபல்லிஃக்மார்களும் செய்த தியாகங்களாகும். இன்றைய முரப்பிமார்களும், முபல்லிஃக்மார்களும் இதை தங்களது கருத்தில் கொள்ள வேண்டும். இவரின் மகனான அனீஸுர் ரஹ்மான் அனஸ் கூறுகின்றார்: ஒருபோதும் உணவை வீணாக்க மாட்டார்கள். ஜல்ஸாவின் சந்தர்ப்பத்திலும் அதிக முறை உணவை தட்டில் வாங்காமல் மேசைகளில் இருக்கும் மீதமுள்ள ரொட்டித் துண்டுகளை உண்டு கொள்வார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த ரொட்டி துண்டுகளை உண்கின்றார்கள் என்றால் நாம் ஏன் உண்ணக்கூடாது? என்று கூறுவார்கள். இளமையிலிருந்து தஹஜ்ஜுத் தொழக்கூடியவர்; நன்னடத்தை, நன்றாக பழகக் கூடியவர். அனுதாபம், கடின உழைப்பு மற்றும் நம்பிக்கைக்குரிய நபராக இருந்தார்கள். கிலாஃபத்துடன் ஆழ்ந்த தொடர்பு மற்றும் பற்று கொண்டிருந்தார்கள். மர்ஹூம் மூஸியாக இருந்தார்கள்.

நான் கானாவில் இருந்தபோது என்னுடன் கானாவில் இருந்தார்கள். மிக கடின உழைப்புடன் நன்றி உணர்வுடன், எளிமையுடன் பணியாற்றினார்கள். தன்னலமற்று பணியாற்றினார்கள். இவர்களுக்கு இரண்டு மகன்களும், மூன்று மகள்களும் உள்ளனர். அதிகமான மகன் வழி மற்றும் மகள் வழி பேரன், பேத்திகள் இருக்கின்றார்கள். அல்லாஹ் இந்த மர்ஹூமுடன் பாவமன்னிப்புடனும் கருணையுடனும் நடந்து கொள்வானாக இவர்களுடைய அந்தஸ்தை உயர்த்துவானாக!

இரண்டாவது குறிப்பு இந்தோனேசியாவைச் சேர்ந்த மதிப்பிற்குரிய எய்தி ஹூமாய்தி ஸாஹிப் அவர்களுடையதாகும். 22 நவம்பர் அன்று உம்ரா செய்யும் பாக்கியம் பெற்ற பிறகு திடீரென்று நோய்வாய்ப்பட்டார். மேலும் இந்த நோயிலேயே 77 வயதில் மதீனாவில் மரணமடைந்து விட்டார்கள். اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْنَ

இவர்களின் குடும்பத்தில் அஹ்மதிய்யத் 1930-களில் வந்தது. இவர்களின் மாமா முஹம்மது ரவூஃப் ஸாஹிப் அவர்கள் ஹஸ்ரத் மௌலானா ரஹ்மத் அலீ ஸாஹிப் (ரலி) அவர்களின் மூலம் பைஅத் செய்தார்கள். அதன் பின் இவர்களின் தாயாருடைய தந்தையாரும், தாயாரும் பைஅத் செய்தனர். இவர்களின் மருமகன் பஸூகி அஹ்மத் ஸாஹிப், ஜமாஅத்தின் முரப்பி ஆவார்.

அவர் கூறுகின்றார்:

இரவும், பகலும் இவருக்கு தப்லீஃக் செய்யும் மிகுந்த ஆர்வம் இருந்தது. தப்லீஃக் செய்யும் பாதையில் என் உயிர் போய்விட்டடும் என்ற ஆசையே இவருடைய மனதில் எப்போதும் இருந்தது. எங்கள் சந்திப்பும் எப்போது நடந்தாலும், எப்போதும் தப்லீஃக் பற்றியே பேசுவார். இவர் தப்லீஃக் செய்யும் முறை பல முபல்லிஃக்களை ஊக்குவிப்பதற்கான காரணமாக இருந்தது.

இவருடைய மகள்களும் எழுதுகின்றனர்: பாங்கு கொடுப்பதற்கு முன்பு பள்ளிவாசலுக்குச் சென்று, அல்லாஹ்வின் நினைவில் அமர்ந்து நேரத்தை செலவிடுவார். தினமும் திருக்குர்ஆன் ஓதுவார்; அதன் மொழியாக்கத்தையும், தஃப்ஸீரையும் படிப்பார்; தப்லீஃகிற்கு தேவையான வசனங்களில் அடையாளமிடுவார். ஒருபோதும் தஹஜ்ஜுத் தொழுகையை விட்டதில்லை. எழுபத்தாறு வயதிலும் கூட தப்லீஃகிற்காக மோட்டார் சைக்கிளில் பயணம் செய்தார்.

செல்வத்தை தியாகம் செய்வதில் குறைவு செய்யாதீர்கள் ;இது அல்லாஹ்விற்குரிய உரிமை. இயன்ற அளவு அதிகம் அதிகமாக தியாகம் செய்யுங்கள்; மேலும் நினைவில் கொள்ளுங்கள் ஜமாஅத்தின் செல்வத்திலிருந்து ஒரு ரூபாயை கூட உபயோகிக்காதீர்கள்; அதன் கணக்கை கொடுக்க வேண்டி வரும் என்று அவர் எப்போதும் குழந்தைகளிடம் கூறிவந்தார்.

உம்ரா பயணத்தின் போது, அவர்களுடைய குழுத் தலைவர் எழுதுகிறார்: உம்ரா முழுவதும் அவர் எப்போதும் இப்படித்தான் கூறிக் கொண்டிருந்தார்: இங்கு இருந்து திரும்பிச் சென்றதும் நான் தப்லீஃக் செய்வேன். மேலும் ஜமாஅத் அஹ்மதிய்யா உறுப்பினர்கள் மக்காவில் ஹஜ் நிறைவேற்றுகிறார்கள் என்பதை மக்கள் அனைவருக்கும் தெரிவிப்பேன்.

அங்கே அவர் உடல்நலக்குறைவால் மருத்துவ பரிசோதனைக்குச் சென்றபோது அவர் மரணம் அடைந்து விட்டார். மருத்துவர் இவரை பார்த்து அல்லாஹ்விற்கு இவரது நற்செயல்கள் பிடித்து விட்டது போல. அதனால்தான் ஜன்னத்துல்-பகீயில் நல்லடக்கம் செய்யும் பெரும் பாக்கியம் இவருக்கு கிடைத்ததுள்ளது என்று கூறினார்

அங்கு மரணம் நிகழ்ந்ததால் அங்கு ஜன்னத்துல் பகீயில் இவருடைய நல்லடக்கம் செய்யப்பட்டது.

தற்போது இவர்கள் நம்முடைய பாகிஸ்தானில், அஹ்மதிகளை நமது கல்லறைகளில் நல்லடக்கம் செய்ய

அனுமதிப்பதில்லை; அருகில் வேறொரு முஸ்லிமின் கல்லறை இருந்தால், அதன் அருகாமையில் வரக் கூடாது என்று கூறுகின்றனர். ஆனால் அல்லாஹ் இவருக்கு அளித்த மரியாதையைப் பாருங்கள்! ஜன்னத்துல்-பகீ போன்ற இடத்தில் இவர் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளார். தற்போது (அங்கு) சென்று அங்கிருந்தும் இவரின் கல்லறையை அகற்றட்டும்! ஆனால் அதற்கான ஆற்றல் அவர்களிடம் எங்கே?

(மெளலவிகளாகிய) இவர்கள் விரைவில் தங்கள் முடிவைச் சந்திக்க உள்ளார்கள். இன்ஷா அல்லாஹ்

இந்தோனேஷியாவுடைய தப்லீஃக் செகரட்டரி பனவன் வர்தி சாஹிப் கூறுகின்றார்: ஒரு வெற்றிகரமான, மிகவும் உணர்ச்சி மிக்க அழைப்பாளர் ஆவார். உண்மையாகவே இவர் ஒருநாள் கூட தப்லீஃக் இல்லாமல் இருக்கக் கூடாது என்ற விஷயத்தை தன்னுடைய வாழ்வின் அங்கமாக்கிக் கொண்டார். ஒரு பழைய மோட்டார் சைக்கிள் இருந்தது. அதில் அமர்ந்து தான் நீண்ட தூரம் உள்ள கிராமங்களுக்கு பயணம் மேற்கொண்டார். மேலும் எந்த பகுதிகளில் ஜமாஅத்திற்கு எதிர்ப்பு உள்ளதோ அங்கும் செல்வார். மேலும் அவர் தனது தப்லீஃக்கின் விளைவாக நூற்றுக்கணக்கான நபர்களை பைஅத்தும் செய்ய வைத்துள்ளார்.

கூறுகின்றார்கள்: கிலாஃபத்துடன் அதிக தொடர்பும், பற்றுணர்வும் இருந்தது. இறைவனுடைய அருளினால் மூஸியாக இருந்தார். பின்விட்டுச் சென்றவர்களில் நான்கு பெண் பிள்ளைகளும், 10 பேரன்களும் இருக்கின்றனர். நான் கூறியதைப் போன்று இவர்களுடைய ஒரு மருமகன் முரப்பியாவார்.

அல்லாஹ் பாவமன்னிப்புடனும், கருணையுடனும் நடந்து கொள்வானாக! அந்தஸ்தை உயர்த்துவானாக!

(அல்ஃபஸ்ல் இன்டர் நேஷனல், டிசம்பர் 26, 2025, பக்கம் 2- 8)

தமிழாக்கம்
முரப்பி
ஸாஹிர் ஹூஸைன்

*******

குத்பா பேருரை (21.11.25) 12-ம் பக்கத் தொடர்ச்சி....

நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

மற்றோர் அறிவிப்பில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தபூக்கிலிருந்து திரும்பி வந்தபோது, அல்லாஹ்வுக்கு நன்றி தெரிவித்தவாறு,

اَلْحَمْدُ لِلّٰهِ عَلٰى مَا رَزَقَنَا فِيْ سَفَرِنَا
هٰذَا مِنْ أَجْرٍ وَّحَسَنَةٍ وَّمِنْ بَعْدِ نَا
شُرَكَاؤُنَا فِيْهِ

என்று கூறினார்கள். பொருள்: இந்த பயணத்தில் நமக்கு அருளையும், நன்மைகளையும், நற்கூலிகளையும் வழங்கிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். மேலும் நமக்குப் பிறகு பின்தங்கியவர்களையும் நம்முடன் இந்த நன்மைகள் மற்றும் நற்கூலிகளில் பங்காளிகளாக வைத்திருக்கிறான். அதற்கு, 'அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் பயணம் செய்தீர்கள்; பயணத்தின் சிரமங்களையும், துன்பங்களையும் தாங்கிக் கொண்டீர்கள்; அதன் பிறகு இந்த வெகுமதிக்கு தாங்கள் தகுதியானவர் ஆனீர்கள்; ஆனால், இந்தத் துன்பங்களை அனுபவிக்காமல் ஸஹாபிகள் உங்களுடன் வெகுமதியில் எப்படி பங்காளிகளாக ஆனார்கள்? இந்த மக்கள் யார்?' என்று ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கேட்டார்கள். அதற்கு, 'மதீனாவில் சில மக்கள் உள்ளனர்; நாம் எந்த இடத்திற்குப் போனாலும், எந்தப் பள்ளத்தாக்கில் இறங்கினாலும், அவர்கள் எங்களுடன் இருந்தனர். நோய் அவர்களை எங்களுடன் புறப்படுவதிலிருந்து தடுத்துவிட்டது. நாங்கள் அவர்களது போர் வீரர்கள் ஆவோம். அவர்கள் வீட்டில் அமர்ந்திருக்கின்ற எங்கள் தோழர்கள் ஆவர்; என் உயிர் யார் கையில் இருக்கிறதோ, அவன் மீது சத்தியமாக! அவர்களின் துஆ (பிரார்த்தனை) எங்கள் ஆயுதங்களை விட எதிரிகளுக்கு எதிராக அதிக பலம் வாய்ந்தது' என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அவர்கள் வீட்டில் இருந்தபடி செய்த துஆக்கள் சக்தி வாய்ந்தவை. அதை அல்லாஹ் ஏற்றுக்கொண்டான்).

மதீனாவாசிகள் வழங்கிய உற்சாகமான வரவேற்பு பற்றி குறிப்பு உள்ளது. தபூக் போரிலிருந்து திரும்பியபோது, மதீனாவாசிகள் வழங்கிய உற்சாகமான வரவேற்பு பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களை வரவேற்பதற்காக, மதீனா வாசிகள் ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் அனைவரும் அன்பினாலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களை பார்க்கும் ஆசையில் நிரம்பியவாறும், மதீனாவிற்கு வெளியே உள்ள ஸனியத்துல் வதாஃ என்ற இடத்திற்கு வந்தனர்.

அவர்கள் இந்தப் பாடலைப் பாடினார்கள்:

طَلَعَ الْبَدْرُ عَلَيْنَا
مِنْ ثَنِيَّاتِ الْوَدَاعِ
وَجَبَ الشُّكْرُ عَلَيْنَا
مَا دَعٰى لِلّٰهِ دَاعٍ

(பொருள்): 'பௌர்ணமி நிலவு ஸனியத்துல் வதாஃஃன் பள்ளத்தாக்கிலிருந்து நம் மீது உதயமானது. அல்லாஹ்வின் அழைப்பாளர் நம்மிடையே இருக்கும் வரை, அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவது நம் மீது கடமையாகிவிட்டது'.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களை மதீனாவாசிகள் மிகுந்த அன்புடன் வரவேற்றது இரண்டு சந்தர்ப்பங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒன்று, அன்னார் (ஸல்) மக்காவிலிருந்து மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்து வந்தபோது. மற்றொன்று, தபூக்கிலிருந்து திரும்பி மதீனாவிற்குள் நுழைந்தபோது.

சில ஹதீஸ் விரிவுரையாளர்கள், புஹாரியின் விரிவுரையாளரான அல்லாமா இப்னு ஹஜர் அஸ்கலானி (ரஹ்) உட்பட, ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களால் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளில் உள்ளது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தபூக் போரிலிருந்து திரும்பியபோது பாடப்பட்டிருக்கலாம் என்று கருதுகின்றனர். ஏனெனில், அப்போதுதான் ஸனியத்துல் வதாஃ என்ற இடத்தில் மக்களும் குழந்தைகளும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை வரவேற்றனர். சிரியா திசையிலிருந்து வந்தவர்களை இந்த இடத்திலிருந்தே வரவேற்கப்பட்டது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தபூக் போரிலிருந்து திரும்புவது மதீனாவாசிகளுக்குத் தெரியவந்தபோது, அவர்கள் மகிழ்ச்சியுடன், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை வரவேற்க மதீனாவிற்கு வெளியே அந்த இடத்திற்கு வந்தனர். ஹஸ்ரத் ஸாயிப் பின் யஸீத் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: தபூக் போரிலிருந்து அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் திரும்பியபோது, மற்ற குழந்தைகளுடன் சேர்ந்து ஸனியத்துல் வதாஃவில் அவர்களை 'நான் வரவேற்றது எனக்கு நினைவிருக்கிறது'. இமாம் பைஹகி (ரஹ்) அவர்களும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தபூக் போரிலிருந்து மதீனா திரும்பியபோது, குழந்தைகள் இந்தப் பாடல்கள் மூலம் அன்னாரை வரவேற்றதாகக் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும், இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் இந்தப் பாடல்கள் பாடப்பட்டிருக்கலாம். ஆனால், தபூக்கிலிருந்து திரும்பியபோது பாடப்பட்டிருக்க அதிக வாய்ப்புள்ளது. ஏனெனில், தபூக்கிலிருந்து திரும்பியபோது, மதீனாவாசிகள் உணர்ச்சிப் பெருக்கால் ஆட்கொள்ளப்பட்டு அன்னாரை பார்க்கவும், வரவேற்கவும் உற்சாகத்துடன் முன்னேறியிருப்பார்கள். நயவஞ்சகர்கள் வதந்திகளைப் பரப்பிய இந்த பயணத்தைப் பற்றி அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களும், ஸஹாபிகளும் பாதுகாப்பாகத் திரும்பி வருவதற்கான நற்செய்தி கிடைத்தபோது, வறண்ட பயிர்களுக்கு நீர் கிடைத்தது போல, மதீனாவின் முஸ்லிம் குழந்தைகள், முதியவர்கள், பெண்கள், ஆண்கள் அனைவரும் இந்த மகிழ்ச்சியான தருணத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை வரவேற்க வெளியே வந்திருப்பார்கள்.

எவ்வாறாயினும், மக்காவிலிருந்து ஹிஜ்ரத் செய்தபோதும் இந்தப் பாடல்கள் பாடப்பட்டிருக்கலாம். அன்பு வெளிப்படுத்துதல் இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் நிகழ்ந்திருக்கலாம். இதில் விவாதம் தேவையில்லை. ஆனால், மதீனாவுக்கு வந்த பிறகு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் மீது அந்த முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட அன்பின் உணர்வு, ஹிஜ்ரத்தின் முந்தைய காலத்தை விட அதிகமாக இருந்தது என்பது நிச்சயமாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

இன்ஷா அல்லாஹ்! இன்னும் சில வாழ்க்கை வரலாற்று நிகழ்வுகளும், அம்சங்களும் உள்ளன. அவற்றை இன்ஷா அல்லாஹ்! அடுத்த முறை கூறுவேன்.

(அல்ஃபஸ்ல் இன்டர் நேஷனல்,டிசம்பர் 26, 2025, பக்கம் 2-8)

தமிழாக்கம்
முரப்பி
முஹம்மது சுல்தான் மைதீன்

*******

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2026-2028 Vol. 11 THU 22 JAN 2026 Issue No. 4

**ACT. MANAGER**
_ATHAR AHMAD SHAMIM
Mobile : +91 9815639670
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

# ஜுமுஆ பேருரை

**தபூக் போரின் நிலைமைகள் மற்றும் சம்பவங்களின் ஒளியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பரிசுத்த வாழ்க்கை வரலாறு**

இறைத் தூதர் (ஸல்) அவர்கள் தபூக்கிலிருந்து மதீனாவிற்கு புறப்பட்டபோது நயவஞ்சகர்களின் ஒரு கூட்டம் அன்னாரை கொலை செய்வதற்கு எண்ணம் கொண்டது. அன்னாரை வழிப்பாதையில் ஒரு பள்ளத்தாக்கின் உச்சியிலிருந்து தள்ளிவிட்டு விட வேண்டும் என்று அவர்கள் தீர்மானித்தனர். ஆனால் சரியான நேரத்தில் அல்லாஹ் நயவஞ்சகர்களின் இந்த சதித் திட்டத்தைக் குறித்து அன்னாருக்கு அறிவித்துக் கொடுத்து விட்டான். அதன் காரணமாக ஹுஸுர் (ஸல்) அவர்கள் மற்றும் அன்னாருடன் மூன்று ஸஹாபிகளைத் தவிர்த்து வேறு எவரும் பள்ளத்தாக்கின் பக்கமாக செல்ல மாட்டார் என்று அறிவித்து விட்டார்கள்.

---

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 21 நவம்பர் 2025** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1404 ஆண்டு **அகாஃ** மாதம் **21ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ○ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○

صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

சென்ற இதழின் தொடர்ச்சி ....

ஓர் அறிவிப்பில் வருகின்றது. ‘நான் விரைவாக மதீனா செல்ல வேண்டும்; எனவே, என்னுடன் விரைவாக வர விரும்புகிறவர் விரைவாக வரலாம்‘ என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். பிறகு, ‘அன்ஸாருடைய சிறந்த வீடுகளை உங்களுக்கு நான் சொல்லட்டுமா?‘ என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள். ‘நிச்சயமாக‘ என்று ஸஹாபிகள் கூறினர். ‘பனூ நஜ்ஜாரின் வீடுகள்‘ என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். பிறகு, ‘பனூ அப்துல் அஷ்ஹலி வீடுகள். பிறகு, பனூ ஸாயிதாவின் வீடுகள் அல்லது பனூ ஹாரிஸ் பின் கஸ்ரஜி வீடுகள்‘ என்று கூறினார்கள். மேலும், ‘அன்ஸாரின் எல்லா வீடுகளிலும் நன்மையே உள்ளது‘ என்றும் கூறினார்கள்.

ஓர் அறிவிப்பில் வருகின்றது. அறிவிப்பாளர் கூறுகிறார்: ஸஅத் பின் உபாதா (ரலி) எங்களிடம் வந்து சேர்ந்தார். அப்போது, அபூ உஸைத் (ரலி) அவர்கள், ‘அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அன்ஸார்களின் வீடுகளின் சிறப்பை எடுத்துரைத்தார்கள். மேலும் நம்மை கடைசியாக வைத்தார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா?‘ என்று கேட்டார். .

ஹஸ்ரத் ஸஅத் (ரலி) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் சென்று, ‘அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே, நீங்கள் அன்ஸாரின் வீடுகளின் சிறப்பித்துக் கூறி, எங்களை கடைசியாக வைத்துள்ளீர்கள்‘ என்று கூறினார். அதாவது ஹுஸுர் (ஸல்) மற்ற சமுதாயங்களை கூறும்போது இவர்களை இறுதியில் கூறினார்கள். ஸஹாபிகள் இதனையும் கவனித்து வந்தார்கள். அதற்கு ஹுஸுர் (ஸல்) அவர்கள், ‘நீங்கள் நன்மையானவர்களில் ஒருவராக இருப்பது உங்களுக்குப் போதாதா?‘ என்று கேட்டார்கள். அதாவது, ‘நான் உங்கள் பெயரைக் குறிப்பிட்டு, நன்மையானவர்களுடன் சேர்த்தது உங்களுக்குப் போதுமானதாக இருக்க வேண்டும்‘.

ஆரம்பத்தில் குறிப்பிட்டது போல், தபூக் போரில் பின்தங்கியவர்கள் இரண்டு பெரிய குழுக்களாக இருந்தனர். ஒன்று நயவஞ்சகர்கள். அவர்கள் மீது அல்லாஹ் தனது அதிருப்தியை வெளிப்படுத்தினான். மற்ற குழுவினர் தங்கள் விசுவாசத்தில் உண்மையானவர்கள். அவர்கள் போரில் கலந்து கொள்ள விரும்பினர். ஆனால், மிகவும் ஏழைகளாக இருந்ததால், முயற்சித்தும் கூட போவதற்கான வழிகளையும், வளங்களையும் அவர்களால் பெற முடியவில்லை. அல்லது ஏதேனும் நோய் அல்லது இயலாமை காரணமாக அவர்களால் சேர முடியவில்லை. திருக்குர்ஆனில் (ஸூரத்துத் தவ்பா, வசனம் 91-92) அல்லாஹ் அவர்களின் மன்னிப்பை ஏற்றுக்கொண்டான்.

ஸஹீஹ் புஹாரியில் உள்ள ஓர் அறிவிப்பின்படி, தபூக் போரிலிருந்து திரும்பி வந்து மதீனாவுக்கு அருகில் வந்தபோது, ‘மதீனாவில் சில மக்கள் உள்ளனர். நீங்கள் எந்தப் பயணம் செய்தாலும், எந்தப் பள்ளத்தாக்கைக் கடந்தாலும், அவர்கள் உங்களுடன் இருந்தனர்‘ என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அதற்கு, ‘அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அவர்களோ மதீனாவில் இருக்கிறார்கள்; மதீனாவில் இருந்துகொண்டு அவர்கள் எங்களுடன் எப்படி இருக்க முடியும்?‘ என்று ஸஹாபிகள் ஆச்சரியத்துடன் கேட்டார்கள். ‘அவர்கள் மதீனாவில் இருக்கிறார்கள்; ஆனால், நோய் போன்ற சில இயலாமைகள் அவர்களை (போரில்) பங்குபெறுவதிலிருந்து தடுத்து நிறுத்தின‘ என்று ஹஸ்ரத் நபிகள்

இதன் தொடர்ச்சி.... 11-ம் பக்கம்..

**National Watch Company**
**Sales & Service**

**B. Mohamed Adil**
93632 06679
99433 38000
**196, Trichy Road, Sulur - 641 402.**
**Somanur, Anuparpalayam, Karumathampatti.**

O.A. NIJAM
99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT
99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
**5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,**
**{ opp. Karuna Clinic } Tirunelveli-627005**

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad